1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS' JAFFNA
phone: No. 100.

சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு தை மாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்

சுதேச வர்த்தமானம்

காலநிலை

மப்புமந்தாரம் இடையிடையே காணப்படினும் மழையில்லை. பங்குனி வெயில் இப்போதே தலைகாட்டத் தொடங்கிவிட்டது. இரவிலே ஓர்வித கடுங் குளிர்காற்றுவீசிக் கொடுகொடுக்க வைக்கிறது.

அர்ச். வின்சென்ற் டீ போல்சபை

இச்சபையின் தனிச்சங்க கால்வருடப்பொதுக்கூட்டம் வருகிற 31-ந்திகதி ஞாயிறுவாரம் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் அர்ச். சூசையப்பர்கூட்டச்சாலையில் நடைபெறும்.

சுதந்திரதினமும் தபாலும்

இலங்கைச் சுதந்திரதினமாகிய வருகிற மாசிமாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை தபாற்கந்தோர் விடுமுறைநாளாகும். அன்றுதினம் தந்திச் சேவையும், முத்திரைவிற்பனவும் ஞாயிற்றுக்கிழமைபோல நடைபெறும். அன்று சாதாரண தபால்கள் ஒருமுறைமாத்திரம் வழங்கப்படும். முக்கிய தபாற்கட்டுகள்மாத்திரம் கொழும்பிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்படும்.

மூவரின் பரிதாபமரணம்

பெரியகடையிலே காங்கேசன்துறை வீதியிலுள்ள கடைஒன்றைச் சென்ற திங்கட்கிழமைகாலை பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது எம். நல்லையா, சி. சுப்பிரமணியம், எஸ். சின்னத்துரைஎனும்மூவர் மின்சாரம்பாய்ந்து திடீரென மரணமடைந்த செய்தியானது, நகர்முழுவதும் அயற்கிராமங்களிலும் காட்டாக்கினிபோற் பரந்து பெரும்பீதியை உண்டுபண்ணியது. இவர்களுடன் வேலைசெய்த மற்றொருவர் மிகமோசமான நிலைமையிலே அரசினர் பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நெடுந்தீவும் தந்திவசதியும்

நெடுந்தீவிலே வானொலித் தெலிபோன்மூலம் தந்திகள்பெறுவதும், தந்திகள்அனுப்புவதும் தினமும் பிற்பகல் 3-45 மணிக்கு நிறுத்தப்பட்டுவிடுகின்றன. ஆனால், இம்மாதம் 1-ந் திகதிதொடக்கம் மற்றோர் தந்திச் சேவை பிற்பகல் 5 மணிவரை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பிற்பகல் 5 மணிவரைக்கும் நெடுந்தீவுக்குத் தந்திகள்அனுப்பக்கூடியதாய் இருக்கிறது. தற்போது நெடுந்தீவுக்கோ, அன்றேல் அங்கிருந்தோ அனுப்பப்படும்தந்திஎதுவம் அந்தரங்கமானதாய் இருக்கக்கூடியதன்று. ஏனெனில், எந்தவானொலிநிலையத்திலும் அதனைப் பெற்று அறிந்துகொள்ளலாம். ஆனால் தபாற்பகுதி விரைவிலே மோர்ஸ்முறையைக் கையாண்டு தந்திகளின்இரகசியத்தைக் காப்பாற்றி வைக்குமெனத் தெரியவருகிறது.

கம்யூனிஸ்த தலைவருக்குச் சிறை

இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியின் பொதுக்காரியதரிசியான டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்கஎன்பவர் கோட்டுநிந்தை செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பிலே சுப்பிறீங்கோட்டில் நீதியரசர்களான கிறேஷன், குணசேகர, புள்ளே ஆதிய மூவராலும் சென்றதிங்கட்கிழமை விசாரணைசெய்யப்பெற்றுக் குற்றவாளியாகி ஆறுவார வெறும்மறியற் தண்டனையும், ஆயிரம்ரூபா பணத்தெண்டமும் விதிக்கப்பெற்றிருக்கின்றார். பணத்தெண்டம் இறுக்க ஒருமாதத்தவணை கொடுக்கப்பட்டுள்ளது. இறுக்காவிடின் மேலும் ஆறுவார வெறும் மறியற்தண்டனை. இவர் சென்றவருடம் ஐப்பசிமாதம் 4-ந் திகதியன்று காலிமுற்றவெளியில் பேசியபோது காலி டிஸ்திறிக்கோடு, மஜிஸ்றேற் கோடுகளின் அதிகாரத்துக்கு எதிராகவும், அவைகளை அவமதிக்கும்வகையிலும் பேசினாரென்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

களவிலே குடியேறவந்தவர்கள்

மூன்றுவள்ளங்கள் நிறையவந்த கள்ளக்குடியேற்றகாரர் சென்ற வெள்ளிக்கிழமைஇரவு காங்கேசன்துறையிலும், மன்னாரிலும் கைதுசெய்யப்பட்டார்கள். காங்கேசன்துறைக்கு வந்தவர்களை ரேகுஅதிகாரிகளும், பொலிசரும் சேர்ந்தும், மன்னாருக்கு வந்தவர்களைக் கடற்படையினரும், பொலிசரும் சேர்ந்தும் கைதுசெய்தனர். அவ்வேளை அவர்கள் கடலிலே எட்டுந்தண்ணீரில் கஷ்டத்துடன்நடந்து கரையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். மூன்றுவள்ளங்களும் காவலில்வைக்கப்பட்டிருக்கின்றன. களவிலே இலங்கைக்கு வந்தார்களென்று அவர்கள் மேல்வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது. காங்கேசன்துறையில் கள்ளக்குடியேற்றகாரர் 16 பேரும், வள்ளக்காரர் 4 பேரும் கண்டுபிடிபட்டார்கள். வள்ளம் இந்திய வள்ளமாகும். அன்று மன்னார்க் கடற்கரைக்கப்பால் இருவள்ளங்கள் நிறையச் சுமார் 50 கள்ளக்குடியேற்றகாரர் புதிதாக வாங்கப்பட்ட மோட்டர் வள்ளங்களில் துறைமுக அதிகாரிகள் சுற்றிவந்தபோது கரையில் இறங்கக் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

வெங்காய விலைஏற்றம்

சிலவாரங்களுக்குமுன் அதிகமழை பெய்தமையாலே யாழ்ப்பாணக்குடாநாட்டிலும், தீவுபகுதிகளிலும் அநேக தோட்டங்களில் வெங்காயப்பயிர் சேதமடையலாயிற்று. அதனால் சேதமுறாது நல்லபலன்கொடுத்த வெங்காயப்பயிர்த் தோட்டங்களின் சொந்தக்காரர் நல்லலாபம் அடைந்துவருகிறார்கள். விளைந்தவெங்காயத்தில் ஓர்பகுதி கொழும்புக்கு ஏற்றியனுப்பப்பட்டமையால் இங்கேவெங்காயத்தின்விலை அதிகரித்திருக்கிறது.

மனிதஉரிமைப் பொருட்காட்சி

ஐக்கியநாடுகளின் ஸ்தாபன கல்வி, விஞ்ஞான, கலாசாரப்பகுதியின் மனித உரிமைபற்றிய விளக்கசம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள். படங்கள் ஆதியவற்றைக்கொண்ட பொருட்காட்சி ஒன்றை யாழ்ப்பாணம், திருக்குடும்ப கன்னிகாமடப் பாடசாலையிலே நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் சென்ற 22-ந் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைத்தனர். அவர் இத்திறப்பு விழாநிமித்தமாக அங்குசென்றபோது, மடத்துவாயிலிலே சாரணச்சிறுவர்கள், சாரணச்சிறுமிகளின் மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டார். பொருட்காட்சியைத் திறந்துவைக்குமாறு வடபெரும்பாக வித்தியாதிகாரி கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள் அவரைக் கேட்டுக்கொண்டார். ஆண்டவர்அவர்கள் அதனைத்திறந்துவைத்துப் பேசியபோது: "ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்து மனிதஉரிமைகள்பற்றிய சர்வதேசப் பிரகடனமானது, மனிதவர்க்கத்தில் சிலபகுதியினருக்கு மறுக்கப்பட்டுவந்த உரிமைகளை அவர்கள் திரும்பஅடைவதிலே பேருதவிபுரிந்துள்ளது; இந்தக்கல்வி, விஞ்ஞான, கலாசாரஸ்தாபனம் உலகமக்களின் கல்வி, கலாசார சேமாபிவிர்த்தியைக் கவனித்துவருகின்றது" என்பனவாகக் கூறிநின்றார்.

மின்சாரத்திட்டத் திறப்புவிழா

காங்கேசன்துறை மின்சாரத்திட்டத்தைச் சென்ற 20-ந் திகதியன்று தலதாபன மந்திரியார் சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்கள் திறந்துவைத்தனர். அவ்வேளை அவர்பேசியபோது: "காங்கேசன்துறை இலங்கையின் சீமெந்துநகராய்த் திகழுகின்றது; இந்தநகர் நிலையானது; நாமெல்லாம் இப்பொழுது ஒளிபெறுவோமாக; முன்னரும்நான் பலமுறை இங்கு விஜயம் செய்திருக்கிறேன்; ஆனால், இம்முறை இப்பட்டினம் எல்லாத்துறைகளிலும் திருந்தியிருக்க நான்காண்கிறேன்" எனக் கூறலாயினர். பின்னர்அவர் மற்றுஞ்சிலருடன் பட்டினத்தைச் சுற்றிப்பார்த்து, திசவிகாரை, கீரிமலை ஆதியவற்றையும் பார்வையிட்டுத்திரும்பினார்.

நெடுந்தீவுப் பிரயாணசேவை

தற்போது ஊர்காவற்றுறைக்கும், நெடுந்தீவுக்குமிடையே போக்குவரத்து நடத்திவருகின்ற "சில்வர் ஸ்பிறே" என்ற அரசாங்கலோஞ்ச் வருகிற பங்குனிமாதம் 1-ந் திகதிதொடக்கம் நெடுந்தீவுக்கும், நயினாதீவுக்குமிடையே தினமும்இருமுறை போக்குவரத்து நடத்திவருமென அறிவிக்கப்படுகிறது. ஊர்காவற்றுறையிலிருந்து நெடுந்தீவுப் பிரயாணிகளை நயினாதீவுக்கு ஏற்றிச் செல்லவும், அங்கிருந்து ஊர்காவற்றுறைக்கு ஏற்றிவரவுமாக நயினாதீவிலே இந்தலோஞ்சுடன் இணைபடக்கூடிய மற்றோர் பிரயாணசேவை நடத்தப்படும்.

அதிசய பனைமரம்

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆனைவிழுந்தான் எனுமிடத்திலே ஆறுகிளைகளையும், நான்குகிளைகளையுங்கொண்ட அதிசயமான பனைமரங்கள் காணப்படுகின்றன. அங்கு வல்லிபுரக் கோவிலுக்குச் சற்றுத்தூரத்திலுள்ள பற்றைகளுக்குநடுவிலே காணப்படும் இப்பனைகளில் ஒன்று அடிமரத்திலிருந்து சற்றுஉயரத்திலே இரண்டாகப்பிரிந்துநிற்க, பின்னர் பிரிந்தவற்றுள்ஒன்று இரண்டாகப்பிரிந்து அவ்வளவோடு நின்றுவிட, மற்றொன்று இரண்டாகப் பிரிந்து, பின்னர் பிரிந்தவைகள் ஒவ்வொன்றும் இரண்டாகப்பிரிந்து இவ்விதம் ஆறுகிளைகளுடன் காட்சியளிக்கின்றது. மற்றப்பனைமரம் அடியிலிருந்து சொற்பஉயரத்தில் இரண்டாகப் பிரிந்துநிற்க, பின்னர் பிரிந்தவைகள்ஒவ்வொன்றும் இரண்டாகப்பிரிந்து நான்குகிளைகளுடன் நிற்கின்றது.

கல்லோயாவில் வெள்ளம்

கீழ்மாகாணத்திலே சென்றவெள்ளி, சனிக்கிழமைகளில் பெருமழை பெய்தமையாலே பரக்கச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. அக்கரைப்பற்றிலே பதிந்த கிராமங்களிலுள்ள வீடுகளில் ஏறக்குறைய நூற்றுக்குத் 90 விகிதமும் வெள்ளத்தில் கிடக்கின்றன. கல்லோயாப் பள்ளத்தாக்கு முழுவதிலும் வயல்வேலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளம் வற்றுகிறவரையிலே பன்னூற்றுக்கணக்கான ஏக்கர்வயல்களில் உழவுவேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. களியோட்டப் பாலத்தையடுத்த பகுதிமுழுவதும் வெள்ளத்தின்வாய்ப்படலாயிற்று. அங்கு சிலதினங்களின் முன் விதைத்தவயல்கள் சேதமடைந்திருக்கின்றன. சம்மாந்துறை—சொறிகல்முனைத்தெரு ஐந்தாறு இடங்களில் வெள்ளத்தால் அள்ளுண்டுபோனது.

மரவரிக் கம்மிஷன்

யாழ்ப்பாணத்திலே சமீபத்தில் விசாரணை நடத்தவிருக்கும் மரவரிக்கம்மிஷனின் அங்கத்தவர்களாகத் திரு. டி. டபிள்யு. றொபேட்ஸ்(தலைவர்), திரு. ஆர். ஆர். செல்லத்துரை, பேராசிரியர் டி. எவ். கிறீன், திரு. ராஜா ஹிவவித்தார்னஎனும் நால்வரையும் நியமிக்க உள்நாட்டுமந்திரி காரியாலயம் உத்தேசித்திருக்கிறது. இந்தக்கம்மிஷன் முதன்முதலாக யாழ்ப்பாணத்திலே விசாரணைநடத்தும். யாழ்ப்பாணக்குடாநாட்டிலே மரவரித்திட்டம்நடந்துவரும் முறையையும், அதன் குறைகுற்றங்களையும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும் மரவரித்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் சாத்தியத்தையும்பற்றி இந்தக்கம்மிஷன் ஆராய்ந்து அறிக்கையிடும். மன்னார், வவுனியா, மாத்தறை, தங்காலைப்பிரிவுகளிலும் மரவரித்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர உள்நாட்டுமந்திரி காரியாலயம் உத்தேசித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியும் மனிதன்

காலை சூரியன்உதிக்கும். கந்தோருக்குப் புறப்படுவேன். மாலைஅதுமேற்றிசையில் குதிக்கும். நானும் வீடுவந்துசேர்வேன். இம்மாதிரி நாற்பது வருடங்களை — நானூற் றெண்பது மாதங்களை கடந்துகழித்தபின் எனக்கு வாழ்க்கையில் ஓர்விதகளைப்பு— இல்லை, கசப்பு ஏற்பட்டுவிட்டது. "பழகப் பழகப் பாலும்புளிக்கும்" என்று ஒரு பழமொழி கூறுவார்களே. அப்படித்தான் எனக்கும் உத்தியோகம்புளித்து விட்டது.

என்வீட்டுக் கருகாமையில் பாடசாலையும் ஒன்றிருப்பதால் ஒருசிறு கடைதிறந்து, சொற்பபொருட்களை நிரப்பி, ஏதோஅன்றுடம்வரும் ஊதியத்தைக்கொண்டு முதுமையில்அமைதி பெறுவோமென்ற எண்ணம் என்மனதில் முளைவிடத்தொடங்கியது. முளைவிட்டஎண்ணம் கிளைவிட்டு, வளர்ந்து, பூத்துக்காய்த்தது. ஏன்? கனிகூடக் கொடுத்துவிட்டதென்று சொல்வதிலும்மிகையில்லை.

கடைத் திறப்பு விழா நடந்தே இரண்டுவருடங்கள் கடந்துவிட்டன. அந்தஇரண்டு வருடங்களும் இரண்டு நிமிடங்களாய் இன்பமாய்க்கழிந்தன. சதாபட்சணங்கள்வாங்க என்கடைக்கு வரும் பாடசாலைச்சிறுவர்களின் பால்வடியும் வதனங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் எவ்வளவுஆனந்தம்! அவர்களது கொஞ்சும்மொழிகளைக் கேட்பதில் என்மகிழ்ச்சியே எல்லைகடந்துவிடும்.

"பெரியவர்களுக்குத் தெய்வத்தைக் காட்டிலும் குழந்தைகளிடந்தான் பயம் அதிகம்" என்று எங்கேயோ நான்வாசித்ததுண்டு. எனக்கென்னவோ குழந்தைகளைக் கண்டால் பட்சந்தான் அதிகமாகிறது. "கோடிதுன்பம் ஒருகுழந்தையின்முகத்தால் தெளிவடையும்" என்று அறியாமலா ஓர் அறிஞன் இவ்வளவு அழகாகக் கூறியிருக்கிறான்.

வழக்கம்போல ஒருநாள் பாடசாலை முடிவுமணி அடித்தது. அருவிகள் போலப் பாடிக்கொண்டு, குருவிகள் போலப் பறந்துவந்தார்கள் குழந்தைகள். இதுநேரம்வரை பாலைவனம் போல உக்கிரமாயிருந்தவீதி புஷ்பங்கள் பூத்துக்குலுங்கும் வண்ணமலர்ச் சோலையாகமாறியது. இனிப்புப்பண்டங்களைக் கைநிறையவாங்க ஓடிவரும் இளஞ்சிறார்களின்வாவை நான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன்.

எதிர்பார்த்ததற்குமாறாக, வயதுஇருபதைதந்தென மதிக்கக்கூடிய இளைஞன்ஒருவன் என்கடைக்குவந்தான். காலரூபாவை என்னிடம்நீட்டி: "பிஸ்கற்தாருங்கள் ஐயா" என்றான். குழந்தைகளின் இன்பக்கனவில் மூழ்கியிருந்த எனக்கு அந்த இளைஞனுடைய குழந்தையாகவே தென்பட்டான். "என்னப்பா குழந்தைமாதிரி இனிப் புப்பண்டம் கேட்கிறாயே" என்று அவனைப் பரிகாசம்செய்தேன். "எனக்குக் குழந்தைகளென்றால் உயிர்; இதுவும் ஒருகுழந்தைக்காகவே வேண்டுகிறேனுங்க" என்று அவன்சட்டென்று பதிலளித்துவிட்டுத் தன்அருகில்நின்ற ஒரு சிறுமியைக் கையில்பிடித்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன்கூறிய அத்தவார்த்தைகளால் என்உடம்புசிலிர்த்தது. ஆனந்தம் பொங்கியது. குழந்தைப்பாசம் எவ்வளவு மகத்தானது. குழந்தைகளின் மாசற்றவதனத்துக்கு மனதைப்பறிகொடுக்காத மனிதனே இந்தஉலகில் இருக்கமாட்டான்போலும்என்று என்மனதுக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன்.

நேரமும் ஓடியது. சோலையாகச் சற்றுமுன்பு சோபையளித்த வீதி மீண்டும் பாலையாகமாறியது. மாலையும்வந்தது. கடையைப் பூட்டுவதற்காக ஆயத்தப்பட்டுக்கொண டிருந்தேன். ஒரு பொலிஸ்காரர் என்கடைக்குவந்தார்.

"பெரியவரே! இந்தக் கடையின் சொந்தக்காரர் நீங்கள்தானே?" என்று என்னைக்கேட்டார், அதிகாரத்தோடு.

— ஜெயம் —

"ஆம், நான்தான் என்றேன்" அதிசயத்தோடு.

"சற்றுநேரத்துக்குமுன்பு யாராவது ஒருவன் உங்கள்கடையில் பிஸ்கற் வாங்கியதுண்டா?" என்று அவர் மீண்டும்கேட்டார். எனக்கு உடனே அந்தஇளைஞனின் ஞாபகம்ஒடிவந்தது. "ஆம், ஒருவாலிபன் வாங்கினான்." இது எனதுபதில்.

"அவன் உங்களுக்கு அறிமுகமானவனா?" என்றார்.

"புதியவன்" என்றேன்.

"அந்தக்கொடியவன் பிஸ்கற்றைக் கொடுத்து ஒருசிறுமியை ஏமாற்றி அவள் கையிலிருந்த காப்புகளைக் கழற்றிக்கொண்டு ஓடிவிட்டான். இந்தக் கடையில்தான் பிஸ்கற்றை வாங்கிக் கொடுத்ததாக அச்சிறுமிகூறினாள்" என்று குமுறும் ஆத்திரத்தோடு கூறினார்.

ஆணியால் அறையப்பட்டவன் போல் அப்படியேநின்றேன் அதிர்ச்சியால். பூமியோடுகூடி நானும் சுழல்வதுபோன்றிருந்தது. "எனக்குக் குழந்தைகள்என்றால் உயிர்....." என்று அவன்கூறிய அந்தவார்த்தைகள் தேன்கூட்டைச் சுற்றிச்சுற்றித் திரியும் தேனீக்கள்போல என்நினைவில் ஓயாமல் வட்டமிட்டன.

நாலு சங்கதிகள்

— மரியாயின்வருடம் ஆரம்பமான நாள்முதல் சுதந்திர அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகரில் பிறக்கும் ஒவ்வோர் மூன்றுகுழந்தைகளிலும் இரண்டுவீதம் மரியாயின் நாமமிட்டு ஞானஸ்நானம் அருளப்படுகின்றன. வழமையிலே இந்தமாதங்களில் அங்குள்ள குழந்தைகளுக்கு அதிகமாக இடப்படும்நாமம் கொலெல், கொயெலி என்பனவே.

* * *

— பரிசுத்தஸ்தானத்தினிடமாக நியமனஞ்செய்யப்பெற்ற புதியஇந்திய பிரதிநிதியான திரு. டின்ஷோ குண்டேலியா அவர்கள் சிலதினங்களின் முன் றோமைநகர் போய்ச்சேர்ந்துவத்திக்கானிலே பரிசுத்தபாப்பரசருக்குத் தமது நியமனஅதிகாரப்பத்திரத்தைச் சமர்ப்பித்திருக்கின்றார்.

— சந்திரனிலே இருமலைகளுக்கிடையில் பெரும்பாலம்ஒன்று இருப்பதாக எச். பெர்ஸி வில்க்கின்ஸ்எனும் பிரித்தானியவிஞ்ஞானி கூறுகின்றார். இப்பாலம் எஞ்ஜினியர்களால் அமைக்கப்பட்டதுபோலவே தோற்றமளிக்கிறது; ஆனால், அது செயற்கைப்பாலம்அல்ல, எரிநட்சத்திரம் ஒன்று தாக்கியதால் ஏற்பட்டிருக்கலாமென்றும் அவர் கூறுகின்றார்.

* * *

— அக்டேத் ஜேக்கப்என்ற பிரபல யூதசெபகூடத்தின் யூதகுருவரான டக்டர் ஏபிரகாம் ஹெர்சன்அவர்களுக்குச் சமீபத்திலே பரிசுத்தபிதா பேட்டியளித்தபோது அவருடன் எபிரேய பாஷையில்பேசி 'ஷலம்' (சமாதானம்) எனும்வார்த்தையுடன் தமதுசம்பாஷணையை ஆரம்பித்தார். 'ஷலம்' என்பது புராதன எபிரேயமுறையான வாழ்த்துதலாகும்.

தேம்பாவணியும் செபமாலையும்

களிகூர்ந்தகாரணிக்கம்

3-ம் காரணிக்கம் — 4-ம் பிரியதத்தம்

24. குகையை நாடல்

அன்றிரவு ஒதுங்குவதற்கென ஓர் உறைவிடந்தேடிப் பெத்தலேகம் நகர் முழுவதும் விரைந்துவிரைந்து அலைந்து திரிந்த சூசைமாதவன் அங்கே இராத் தங்குவதற்கு இடங்கிட்டாமையால் இனி என்செய்வதென்று அறியாது உள்ளங்கலங்குகின்றார். மலர்போலும் மெல்லியபாதங்களையுடைய கன்னித்தாய் மிகவும் வருந்தக்கண்டும், (இரவினடு மருவக்கண்டு) நடுச்சாமம் கெருங்கிவரக்கண்டும் உள்ளம் புண்ணாக வருந்தியவராய்த் தன்துணைவியைநோக்கிச் சொல்லுகின்றார்:

எனது அற்பத்தனத்தினால்அல்லவோ இந்தத்துயரெல்லாம வந்தது; நல்லறத்தினால் பெருமையுடையவளே! நீ அற்பனுகியஎன்னை அடைந்ததினால் அல்லவோ இத்தகைய வருத்தமும், நிந்தையும் அடைகின்றாய்; ஆகிமனிதன்செய்த பாவத்தால்வந்த துன்பங்களைத்தீர்த்து நம்மைஇரட்சிக்கும்படியாக ஆண்டவன் இங்கே பூமியிற் தாழ்ந்து மனிதாவதாரமாய் ஓர்தருமமுஞ்செய்யாத அடியானை அண்டிய போது, அவன் அளவிறந்தவல்லமை உடையோனையினும் என்னால் மனம் வருந்தாதிருப்பானே?

செல்வம்நிறைந்த மோட்சநகரத்தில் வாழ்ந்திருக்கும் அரசனுகியகடவுள் (உடைநகர்க்கண் வாழ்அரசன்) தரித்திரத்தை விரும்பித்தேடி இவ்வுலகில் மனிதனுய்வந்து பிறப்பதற்கு (வறுமை நாடிஉதிப்ப) இடம்அகன்ற செல்வம் நிறைந்த இப்பெத்தலேகம்நகரம் தக்க இடமல்லஎன்று நினைத்தகாரணத்தினாலோ (சீர்மிடைநகர்க்கண் பதியல்ல தென்றே) இந்தநகரத்தார் நம்மைப் புறக்கணித்துத் தள்ளியதால், நடுநகரில் எமக்குஇடங்கிடையாது நாம் திரிந்துகொண்டிருந்ததன்மையாயிற்று. (இன்னர் விலகிஎமக் கிடைநகர்க்கண் இடமின்றி இரிந்ததன்மை) இனிமேல் இந்தநகரத்தின் வெளிப்புறத்தில் நாம் வரும்பொழுது இன்பமாகப் பார்த்த குகையில் போய்த் தங்கியிருந்தால் நல்லது என்றார். (இமிழில்இனிப் புடைநகர்க்கண் கண்டமுழை புணரப்போகில் புரிவென்றான்)

உடைநகர்க்கண் வாழரசன்
வறுமைநாடி உதிப்பச்சீர்
மிடைநகர்க்கண் பதியல்ல(து)
என்றே இன்னர் விலகிஎமக்(கு)
இடைநகர்க்கண் இடமின்றி
இரிந்த தன்மை இமிழில்இனிப்
புடைநகர்க்கண் கண்டமுழை
புணரப் போகில் புரிவென்றான்

இதற்கு மரியம்மாளும் நல்லதுஎன்கிறாள். அதால் அலைகள்எழுந்து முழங்கிய பெருங்கடலின் சாயலாய்க் காட்சிஅளித்த அந்தகரைக்கடந்து அவர்கள்இருவரும் வந்தவழியேதிரும்பிப் புறநகரைநோக்கிச் செல்லுகின்றனர்.

குகையும் தென்படுகின்றது. அது ஒருமலையைப்பிளந்து அதன்மேல் ஒரு பெருங்கல்லே ஏற்றின தோற்றமுடையது. அடித்தளமோதும் காற்றும் மழையும் உள்ளேநுழைதற்கேற்ற அகன்றவாயிலை உடையது. அச்சம், துன்பத்திற்கு உறைவிடமாயது. இரவிலே மிருகங்கள்வந்து அடைவது.

அங்ஙனமாக, மிருகங்கள்உறையும் இடமென்று எவரும் தங்காது

பண்டிதர் C. செல்வரத்தினம்

வெறுத்துநீக்கிய அக்குகையில் சூசையப்பரும், மரியம்மாளும் பிரவேசிக்கிறார்கள். அப்பொழுது சூழநின்ற வானவர்கள் ஆசையோடும், விரைவாயும் அதைச் சுத்தம்செய்துவிடவே, அதனுள் அவர்கள் புகுந்தபொழுது அது பூஞ்சோலையின் வடிவழகைக் காட்டி மகிழ்ச்சியடைகிறது.

அந்தக்குகை கிடைத்ததையிட்டு அவர்களும் மகிழ்ச்சி அடைந்தவர்களாய்,

"தணி(வு)அரும் சினத்தொடு
தகைத்தி அக்றிஞர்
அணி(வு)அரு குணத்தில்ஈங்(கு)
அமலன் நாடிய"

தணிக்கப்படாத கோபத்துடனே தடுத்து (தகைத்து) தூரத்தினவர்களாகிய அந்தகரத்தார் எல்லாரும் அடைதற்கருமையான தயையினால் இறைவன் (அமலன்) இவ்வுலகிற் தேடிவந்த (நாடிய)

"பணி(வு)அரு மிடிகலம்
பயக்கின் முரெனத்
தணிவரும் அன்(பு)எழுந்(து)
ஆசி சொற்றினர்"

தாழ்மையான அரியதரித்திரத்தின் (மிடி) செல்வத்தைத் தந்தார்களென்று அன்புமிகுந்து நகரமக்களுக்கு ஆசிகூறுகிறார்கள்.

நவீனகுரங்கு மனிதர்

பாதிமனிதனுகவும், பாதிகுரங்காகவும் தோற்றமளிக்கும் மூன்றுநவீனகுரங்குமனிதர் வடமலாயாவிலுள்ள காடுகளிலிருந்து வெளிகொண்டுவந்து அயலிலுள்ள கிராமவாசிகளைப் பயமுறுத்துவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. உடலில் நீண்டமயிரும், கோரப்பற்களுமுடைய இந்தக்குரங்குமனிதர் சென்றகத்தால் தினமன்றும், அதற்குப்பிறகும் காணப்பட்டதாகத் தெரியவருகிறது. இவைகளையிட்டுப் பீதிகொண்ட அப்பகுதித் தோட்டத் தொழிலாளர் தங்கள் வீடுகளிலிருந்து வெளிகொள்ளப் பயந்துசாகின்றனராம். ஒருபெண்ணையும், இரண்டுஆண்களையுங் கொண்ட இந்தக் குரங்குமனிதரை உயிருடன் பிடித்துவருமாறு கோலாலம்பூரிலிருந்து இருபது விசேஷபொலிசாருக்குக் கட்டளைபிறந்திருக்கிறது. இக்குரங்குமனிதர் ஆதியிலே மலாயாவில் அடிவைத்த நாடோடிகளான மலைச்சாதியினரின் சந்ததியினராய் இருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

சுதந்திர, சுயேச்சை ஆசியா

உலகசமாதானத்துக்குச் சுதந்திரமும், சுயேச்சையும் கொண்ட ஆசியா இன்றியமையாததுஎன்று தூரகிழக்கு நாடுகளிலே சுற்றுப்பிரயாணம்செய்து திரும்பியுள்ள பிரபல குடியரசுக்கட்சிச் சென்றார் அலெக்சாண்டர் சிமித் அவர்கள் வாஷிங்டன்நகரிலே அழுத்தமாகக் கூறியிருக்கிறார். சனப்பெருக்கம், உணவுக்குறைவு, எழுத்தறியாமை முதலிகாரணமாகப் பாமரர் அநேகர் கம்யூனிஸ்த பிரசாரத்தில் மயங்குகின்றநிலை இருக்கிறது. ஆனால், மற்ற வகைகளில் நிலைமைதரியமளிக்கிறது. ஆசியதலைவர்களில் அநேகர் கம்யூனிஸ்தர்கள் செய்வது பொய்ப்பிரசாரம்என்பதை நன்முகத்தெரிந்துகொண்டிருக்கின்றனர். இந்தியாவைக் குறிப்பிட்டு அவர் எழுதியதாவது: "பிரதமர் நேருவின் வெளிப்படையான பேச்சு எங்கள்கருத்தைக் கவர்ந்தது. இந்தியாவில் கம்யூனிஸ்த அபாயத்தை அவர் தீவிரமாக எதிர்க்கிறார். ஆயினும் இந்தியாவுக்கு வெளியில் அந்த எதிர்ப்பைக்காட்ட அவர்தயாராயில்லை.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிமாதம் 29-ம் திகதியன்று

"திவ்வியநற்கருணையின் பாப்பானவர்" எனும் சிறப்புப்பெயர் கொண்டு அறியப்படுகிறவரான முத். பத்தாம் பத்திநாதர் அடுத்த வைகாசிமாதம் 29-ந் திகதி சனிக்கிழமையன்று சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்திலே பிரசித்தமாகநடந்தேறும் திருவைபவத்தின்போது அர்ச்சியசிஷ்டப்பட்டம் அருளப்படவிருக்கின்ரார். அவர் பரமபதம்அடைந்து சுமார் மூன்று மாதங்குறைய 40 வருடங்களின் பின்னும், முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பெற்று மூன்று வருடங்களின்பின்னும் இத்திருவைபவம் நிகழவிருக்கின்றது. 1712-ம் ஆண்டு அர்ச். ஐந்தாம் பத்திநாதருக்குப்பின் பாப்பானவர்ஒருவர் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படவிருப்பது இதுவே முதன்முறையாகும். எமதுகாலத்திலே சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தில் ஒரேயொரு அர்ச்சியசிஷ்டவளாய் 1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்தில் அர்ச். மரியகொறெற்றிஅம்மாள் பிரசித்தமாக இத்திருப்பட்டம் அருளப்பெற்ரூள். வழமையிலே இத்திருப்பட்டவைபவம் நடந்தேற ஐந்துமணிநேரம்வரை செல்லும். ஆனல், அடுத்தபங்குனியில் 78 வயதுடையவராகவிருக்கும் பரிசுத்தபாப்பரசருக்குக் கஷ்டஏற்படாவண்ணம் மூன்று மணிநேரத்தில் அதுமுடித்துவைக்கப்படும். பாரம்பரியத்தின்படி, இத்திருவைபவமுடிவில் நிறைவேறவேண்டிய பெரியபாடற்பூசையையும் நிறைவேற்றிவைக்க வேண்டியவர் பரிசுத்தபிதா அவர்களே. ஆனல், அதே முகாந்திரத்தையிட்டு அவருக்குப்பதில் கருதினல்ஒருவரால் அது நிறைவேறும். முத். பத்தாம்பத்திநாதர் 1914-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ந் திகதி பரகதிஅடைந்தபோது "ஓர்அர்ச்சியசிஷ்டர் மரணித்தார்" என்று இத்தாலியபத்திரிகைகளெல்லாம் தலையங்கமிட்டுத் தீர்க்கதரிசனவாக்குப்போல் எழுதித்துக்கங் கொண்டாடினஎன்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தென்கோறிய மனந் திரும்புதல்கள்

தென்கோறியாவிலே முன்னர்எந்தவருடத்திலும் இல்லாத தொகையினராய் அதிகமான கோறியர்கள் — அதாவது 10,057 கோறியர்கள் சென்றவருடம் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்ரார்கள். இவர்களைத்தவிரப் 14,502 கோறியர்கள் திருச்சபையில் சேர்ந்துகொள்ளுமாறு ஞானோபதேசம் படித்துவருகிரூர்கள். பிந்திய அறிக்கைப்படி, தென்கோறியாவில் 1,67,977 கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். அந்நாட்டிலே பிறநாடுகளைச்சேர்ந்த பட்டாளங்களின் விசாரணைக் குருமார்நீங்கலாக 250 குருமார் வரையில் இருந்துவருகின்றனர். இவர்களில் 200 பேர்வரையில் கோறியர்கள். பிறநாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்கமிஷனரிமார் 54 பேர். அங்கு சவுல்நகரிலுள்ள பெரியகுருமடத்தில் 65 கோறியமாணவர்களும், சின்னக்குருமடத்தில் 150 மாணவரும் படித்துவருகின்ரூர்கள்.

பாப்பரசரும் கடந்த வருடமும்

பரிசுத்தபாப்பரசர் சென்ற 1953-ம் ஆண்டிலே 4,17,584 பேருக்குப் பேட்டிஅருளியிருப்பதாக வத்திக்கான்தெரிவிக்கின்றது. இவர்களிலே 492 பேருக்குப் பிரத்தியேக பேட்டியும், 30,832 பேருக்கு விசேஷபேட்டியும், 2,126 பேருக்குக் கணியாழிமுத்தமிடும் வைபவபேட்டியும், 3,84,134 பேருக்குப் பொதுப்பேட்டியும் அருளியிருக்கின்ரூர். அதாவது சென்றவருடத்திலே அவர் நாளொன்றுக்குச் சராசரியாக ஆயிரம்பேருக்குப் பேட்டியளித்துள்ளனர். அவர் 77 வயதுடையவராய் இருந்தபோதிலும் சென்றவருடத்திலே 84 பிரதம சொற்பொழிவுகள், வானொலிப்பேச்சுகள் நிகழ்த்தியிருக்கின்ரூர். இவற்றிலே இத்தாலியபாஷையில் 34. பிரான்சியபாஷையில் 29. ஜேர்மன் பாஷையில் 8. ஆங்கிலபாஷையில் 5. லத்தீன்பாஷையில் 4. ஸ்பானியபாஷையில் 3. போர்த்துக்கேயபாஷையில் 1. இவைதவிர அர்ச். பேர்ணைட் பரமபதமடைந்த 8-ம் நூற்ரண்டின் ஞாபகார்த்தமாக ஒன்றும், மரியாயின்வருடத்தைப் பிரகடனஞ்செய்து மற்ரொன்றுமாக இருசாதாரண கிருபங்களும் விடுத்திருக்கின்ரூர். சென்றவருடத்திலே அவரைப் பேட்டிகண்டவர்களில் ரொங்காதீவின் சாளொட்டரசியும், யோர்தான்நாட்டின் ஹூசேயின் தலால்மன்னரும், யப்பானியபட்டத்திளவரசரும் விசேஷப்பட்டவர்கள்.

பண்டித நேருவும் கருதினலும்

இம்மாதம் 1-ந் திகதியன்று பம்பாய்நகரிலே பண்டிதநேரு அவர்கள் கொலாபாஎனுமிடத்தில் நிறுவப்பெற்றுள்ள மூலாதார ஆராய்ச்சிஸ்தாபனத்தைத் திறந்துவைக்கச்செல்லுமுன் அங்கர்அதிமேற்றிராணியாராகிய கருதினல் கிரூசியாஸ் ஆண்டவர்அவர்களின் மாளிகைசென்று அவருடன் தேநீர்விருந்துஅருந்தினர். இவ்விருந்துக்குச் சுமார் 50 பிரமுகர்களுக்கருதினலாண்டவர் அழைத்திருந்தார். தேநீர்அருந்தியபின் பண்டிதநேரு கருதினலுடன் அவருடையஅறைக்குச் சென்று காற்மணிநேரம்வரை அவருடன் அளவளாவிச் சம்பாஷித்தார். பின்னர் அம்மாளிகையில் தாம்கண்டவைகளைப் பற்றியவிபரங்களை அன்புகலந்த அக்கறையுடன்விசாரித்தார். அதிமேற்றிராசன மாளிகையைவிட்டுப் புறப்படும்போது அதற்கு அருகாமையிலிருக்கும் மடத்தைச்சேர்ந்த ஏழைகளின் சிறியகன்னியாஸ்திரிமார் கூடிநின்று அவருக்கு வாழ்த்துக் கூறினர்கள்.

புதிய அர்ச்சியசிஷ்டர்கள்

முத்.பத்தாம்பத்திநாதருடன் நிகழும் மரியாயின்வருடத்திலே குறைந்தபட்சம் முத்திப்பேறு பெற்றபட்டம் பெற்றவர்களான ஆறுபேர் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுவார்கள். இவர்களிலே முத். கஸ்பாறே டெல்பவலோஎன்பவர் யேசுவின் மகாவிலேயேறப்பெற்ற திருஇரத்தமிஷனரிமார்சபையை அடியிட்டவர். முத். பத்தாம்பத்திநாதராலே முத்திப்பேறு பெற்றவர். மற்ரொருவர், 18-ம் நூற்ரண்டின் கீர்த்திவாய்ந்த யேசுசபைக்குரவரான முத். ஜியுசெப்பி பிஞ்ஞாத்தெலிசுவாமியார். மற்றவர்கள், முன்னர் தெரிவித்தபடி, அர்ச். ஜோண் பொஸ்கோவின் இளஞ்சிஷ்யரான முத். தொமினிக்கோ சவியோ, பிறர்சிநேக ஊழியர் சபையை அடியிட்ட இத்தாலிய கன்னியாஸ்திரியான முத். மரியா டி ரூசா, ஓஷானியாவின் முதல் வேதசாட்சியான முத். பீற்றர் சானல் சுவாமியார், பலொட்டின்குருமாரென அறியப்படும் கத்தோலிக்க அப்போஸ்தலத்துவ சபையை அடியிட்ட முத். வின்சென்ற் பலொட்டினென்பவர்களே.

புதிய ஜனுதிபதி

சமீபத்திலே பிலிப்பைன்ஸ் நாட்டின் புதியஜனுதிபதியாகத் தெரியப்பெற்றவரான திரு. றேமன் மக்சசாய்அவர்களுக்குப் பரிசுத்தபிதா ஆசீர்வாதமும், சோபனவாழ்த்தும் அனுப்பிவைத்திருக்கின்ரூர். ஜனுதிபதித்தேர்தலின்போது இவரை ஓர் புறொட்டஸ்தாந்தரென்றும், பிறிமேசனென்றும், மதபேதிகள்குழுவைச் சேர்ந்தவரென்றும் இவரின்எதிரிகள் பிரசாரஞ்செய்துவந்தார்கள். ஆனல், இவரோ தாம் ஓர்கத்தோலிக்கரென்றும், கத்தோலிக்கசேவையிலே தாம் ஆற்றிவந்துள்ள பணிகளைக்கொண்டு தாம் வேதானுசாரமுள்ள ஓர்கத்தோலிக்கரென்றும் ஒப்பனையுடன் எடுத்துக்காட்டினர். தேர்தலிலேஇவர் பெருவெற்றியடைந்தும் தமதுபாரியாரோடும், மூன்றுபிள்ளைகளோடும் தேவதோத்திரபூசைக்குச் சமுகமளித்தார்.

பிள்ளைகளின் சமாதான செபநாள்

நிகழும் மரியாயின்வருடத்திலே வைகாசிமாதத்தில் உலகமுழுவதிலும் சமாதானத்திற்கான பிள்ளைகளின்செபநாள் ஒன்றைநடத்தவேண்டுமென்று பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரும், கிறீஸ்துநாதரது சமாதான இயக்கத்தின் சர்வதேசதலைவருமான கருதினல் பெல்தின்ஆண்டவர் கூறியஆலோசனையைப் பரிசுத்தபாப்பரசர் மனப்பூர்வமாக அங்கீகரித்திருக்கின்ரூர். ஆனல், இன்னமும் திகதிகுறிக்கப்படவில்லை. சென்றமகாயுத்தம் நடைபெற்றுவந்த காலத்திலே பரிசுத்ததேவதாயாரின் வல்லமிக்க சஹுகைமூலம் சமாதானம் உண்டாகும்படியாக ஒவ்வோர் வைகாசிமாதத்திலும் விசேஷவிதமாகச் செபஞ்செய்துவருமாறு உலகமுழுவதிலுமுள்ள பிள்ளைகளைப் பரிசுத்தபிதா கேட்டுவந்தார். உலகமுழுவதிலும் நடைபெறும் இந்தச் சமாதான செபதினமானது நமது அருமையான பிள்ளைகளிலே உலகமுழுவதிலும் கிறீஸ்தசகோதரத்துவ உணர்ச்சியைப் பிறப்பிக்குமெனப் பாப்பரசர் கூறுகின்ரூர்.

கம்பொஸ்தெல்லாத் திருயாத்திரை

அப்போஸ்தலரான சந்தியாகப்பரின்திருநாள் ஓர் ஞாயிற்றுக்கிழமையில் வரும்போதெல்லாம் ஸ்பானியதேச கம்பொஸ்தெல்லாநகர் அதிமேற்றிராசனத்துக்கு ஓர்பரிசுத்தவருடமாகும். அதற்குஅருளப்பட்டுள்ள ஓர்புராதனஉரிமை இதுவாகும். இவ்வருடம் சந்தியாகப்பர்திருநாள் ஓர்ஞாயிற்றுக்கிழமை வருவதால் அவர்திருமேனி இருந்துவருகின்ற கம்பொஸ்தெல்லாநகர் மகாலயத்திலே 1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்தின்போது ரூமாபுரி அர்ச். பேதுருவானவர்மகாலயத்திலே நடந்தேறியவைகளைப் போலும் அதேதிருவைபவங்களுடன் இப்பரிசுத்தவருடம் ஆரம்பமாகிறது. அதனல் பலநாடுகளிலிருந்தும் அநேக தேசீயயாத்திரைகள் அங்குநடந்தேறவிருக்கின்றன. முந்தியபரிசுத்தவருடத்தின்போது போர்த்துக்கேயயாத்திரிகர்கள் அங்கு பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் ஒன்றைக் கொண்டுசென்று அம்மகாலயத்திலே ஓர்சிங்காசனத்தில் ஸ்தாபித்தார்கள். இம்முறை ஆங்கிலேய தேசீயயாத்திரிகர்கள் வால்சிங்காம்நாயகியின் திருச்சுரூபம் ஒன்றைக் கொண்டுசென்று அதிலே ஸ்தாபிக்கவிருக்கின்ரூர்கள். பல்வேறு சர்வகலாசாலைகள், கல்லூரிகளைச்சேர்ந்த யுவர்களும், பையன்களும் அடங்கியயாத்திரைக்கோஷ்டி ஒன்றும் இங்கிலாந்திலிருந்து அங்கு செல்லவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
தை மாதம் 28-ந் திகதி

தமிழரும் வருகாலமும்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு — ஒற்றுமைநீங்கினுல் அனைவர்க்குந் தாழ்வு" என்ற அருமையான சுலோகமானது இன்றுவாலாயமாகத் தமிழ்மக்களின்வாயினின்று எழுவதொன்றாகும். சமூகத்தை ஒற்றுமைப்படுத்தவேண்டிய — ஓர் பெருங்கருமத்தைச் சாதிக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் இந்தச்சுலோகத்தை எடுத்தாளாதபேச்சாளர்கள் இல்லையெனலாம். ஆனால், இன்று தமிழ்மக்கள் தம்முடையசமூக, அரசியல் வாழ்க்கையிலே இதனைமேற்கொண்டு வருகின்றனரா? அன்றேல்ஓர்புறமாக ஒதுக்கிவிட்டு வாழ்கின்றனரா? அம்மம்ம! இன்று அவர்களின் சமூகவாழ்க்கையிலே எத்தனை பெரும்பிளவுகள்! அரசியல் வாழ்க்கையிலே எத்தனைபெரும் பிரிவுகள்! இவைகளையெல்லாம் ஒவ்வொன்றாய் ஆராய்ந்துபார்க்கும்போது, வருங்காலத்திலே தமிழ்ச்சாகியத்தின்கதி யாதாகுமோவென்று கவலையுடன் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

முந்தஅரசியலை எடுத்துக்கொள்வோம். கொள்கையிலும், கொள்ளுங்கோலத்திலும் முற்றுகவே ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ள அரசியற் கட்சிகள் தமிழ்சாகியத்தைச் சுளியோடிச் சுற்றிவளைந்து அதனைத் துண்டாடிக்கொண்டிருப்பதை நோக்கும்போது, அதுஒன்றுபட்டுஒற்றுமையான ஓர் சனசமூகமாய் வாழ்ந்திருக்குமென்று நம்புவது எங்ஙனம்? தமிழ்க்காங்கிறஸ் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழரசுக்கட்சி, கம்யூனிஸ்த கட்சி, நவலங்கா சமசமாஜகட்சி, மறுலங்கா சமசமாஜகட்சி, பிற்தியமூன்று கட்சிகளிலுமிருந்து விலகிப்போய் ஒன்றுகூடியிருக்கும் ஐக்கியமுன்னணிச் சமதர்மகட்சி, இவைகள் ஒன்றிலுமே சேராத சுதந்திரகட்சி என்பன வாய்ச் சிறுபான்மையினரான நம்தமிழ்மக்கள் எட்டுத்துறைகளில் நிற்கும்போது, அதனால் தமிழ்ச் சனத்தலைவர்களும் எட்டாகப்பிரிந்து எட்டுத்துறைகளிலே ஒருவர்க்கொருவர் எட்டகிற்கும்போது, தமிழ்ச்சாகியத்தின் எதிர்காலநிலைமை எவ்வாறுகுமென்று எடுத்துக்கூறவும்வேண்டுமா?

சமூகசேவா சங்கமென்றும், சமூகமுன்னேற்ற சங்கமென்றும், கூட்டுறவுச் சங்கமென்றும், சனசமூக நிலையமென்றும், ஐக்கிய சமாஜமென்றும் மக்களின் நலனை ஆசித்து எதையாவது ஸ்தாபித்தாலும் அவற்றிலேபுலுவுருவிகள்போன்று இந்த அரசியற்கட்சிகளும் புகுந்து கட்சிகட்சியாக மக்களைப் பிரித்து, ஐக்கியத்தைக்கெடுத்து, முன்னேற்றத்தைத் தடுத்துக் கன்னக்கோல்கள்போன்று எல்லாவற்றையும் அறுத்துத் தள்ளுகின்றன. அம்மட்டா! பேர்தாக்குறைக்கு ஓர்பாலார் சமயக்கூச்சல் கிளப்ப, மற்றோர்பாலார் சாதிக்கூச்சல்எழுப்ப, இவைகள் கூடிக் கருமத்தைக்குழப்ப, அதனால் சமூகமே அல்லோலகல்லோலமாகின்றது. இந்தப்பரிதாபநிலைமையிலே சமூகமக்களையும், சமூகத்தவர்களையும் ஒன்றுகூட்டி ஒற்றுமைப்படுத்தி "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" என்பதை உணர்த்திவைக்கக்கூடிய தலைவர்கள் பிறப்பது எக்காலமோ?

மற்றோர் மகாநாடு

ஜேர்மனியின் ஐக்கியத்தையும், ஐரோப்பாவின் பாதுகாப்பையும், ஆஸ்திரியாவுக்குத் தேசியசுதந்திரம் அருளுவதான ஓர் உடன்படிக்கையையும் பற்றிக் கலந்துவிவாதித்து ஓர் நல்லமுடிவுக்கு வரும் நோக்கமாய்ப் பிரித்தானிய, அமெரிக்க, பிரான்சிய, ரஷிய வல்லரசுகள் நான்கினதும் வெளிநாட்டுமந்திரிமார்கள் போர்லின் நகரிலே சென்றசனிவாரமுதல் மற்றோர் மகாநாடு கூடிவருகின்றார்கள். இந்தநோக்கமாக 1951-ம ஆண்டு பாரீஸ்நகரிலே இந்தநான்கு வல்லரசுகளினதும் வெளிநாட்டு மந்திரிமார்களின் பிரதிநிதிகள் ஓர்மகாநாடு கூட்டினர்கள். எழுபத்துநான்குமுறை கூடினர்கள். ஆனால், கண்டபலன் ஒன்றுமில்லை. ரஷிய பிரதிநிதிகள் "ஓடவும்மாட்டேன், பிடியுங்கொடேன்" என்ற பான்மையாய் நடந்தமையாலே எல்லாம் வெறும்பேச்சளவிலேயே முடிந்தது. இம்முறைகூடியிருக்கும் மகாநாடுசம்பந்தமாய் மேற்கு வல்லரசுகள் மூன்றினதும் வெளிநாட்டுமந்திரிமார்கள் செய்திருக்கும் திட்டம் யாதெனில், முன்சொன்ன மூன்றுகருமங்களும்பற்றிச் சோவியற் வெளிநாட்டு மந்திரியாரான திரு. வயாச்செலாவ் மொலற்றவ் என்பவருடன் கலந்து விவாதித்து ஓர்கரைக்கு வருவதேயாகும். அதனால், அம்மூவரும்சேர்ந்து சோவியற் யூனைகு மணிகட்டுவரா? மொலற்றவ் இக்கவிவாதத்திலே அவர்களுகுக் கட்டுப்படுவரா? என்பதே தற்போது பிறக்கும் கேள்விகளாகும். மணிகட்டப்படுமானால், அவரும் கட்டப்படுவாரானால், உலகசமாதானத்தின் உதயகாலம் பிறந்துவிட்டதென்றே உத்தேசிக்கலாம். இந்தமகாநாடு வெற்றிகரமாக முடியுமானால், (1) சுதந்திரமான பொதுத் தேர்தல் நடைபெற்று, அகில – ஜேர்மனிய சுதந்திர அரசாங்கம் அமைக்கப்படும். அதனால் இம்மகாநாட்டிலே ஜேர்மனிமுழுவதும் சுதந்திரமான பொதுத் தேர்தல்நடத்த ரஷியா உடன்படவேண்டும். "ஜேர்மனிமுழுவதுக்கும் சுதந்திரமும், ஐக்கியமும், சமாதானமும் அருளுங்கள்" என்பதே இன்று ஜேர்மனிய தலைவர்களின் ஏகமுழக்கமாகும். (2) ரஷியாவின் தந்திரசூழ்ச்சியாலே நெடுநாளாக இழுபட்டுக்கொண்டிருக்கும் ஆஸ்திரிய தேசியசுதந்திர உடன்படிக்கை நிறைவேறி அதுவும் சுபீட்சமடையும். (3) இவற்றின்விளைவாக ஐரோப்பாவின் பாதுகாப்பு நிர்ணயிக்கப்படும். "இம்மகாநாட்டின் விளைவுகளைப் பலரும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றனர்; இம்மகாநாடு தோல்வியடையுமெனச் சிலர்கூறியிருக்கின்றனர்; ஆனால், சோவியற் ரஷியாவோ அதுவீணனதெனக் கருதவில்லை" என்று ரஷிய வெளிநாட்டு மந்திரியார் கூறுகின்றார். சரி, இது எவ்வாறு முடிவடைகிறதென இருந்து பார்ப்போம்.

சதாசகாயமாதா கோணம்

—:—

தந்தை திருந்தின விந்தை

ஒருஊரில் ஒருநல்ல கத்தோலிக்க குடும்பம் வாழ்ந்துவந்தது. தாயும், பிள்ளைகளும் வேதானுசாரத்தில் மிக்க சிரத்தை உள்ளவர்கள். தகப்பன் பிள்ளைகளுக்கு உத்தமகத்தோலிக்க கல்வி ஊட்டியிருந்தான. அதனால் அவர்களை மெச்சாதவர்கள் அந்தஊரில் இல்லையெனலாம். ஆனால், தகப்பன்மாத்திரம் கனகாலமாகத் தேவநற்கருணை பெறாது, பாவசங்கீர்த்தனஞ் செய்யாது, தன்னுடைய சொந்த நித்திய இரட்சணியத்தைப்பற்றிக் கவலைகொள்ளாது போகடி போக்காகச் சீவித்துவந்தான். தாய் என்ன சொல்லியும், பிள்ளைகள் கெஞ்சிமன்றாடியும் அவன் தன் சீவியத்தைத் திருத்திக்கொள்ள மனம் உள்ளவனுகத் தெரியவில்லை.

குடும்பத்தில் நல்லாங்கு போலப் பொல்லாங்குசம்பவிக்கும் வேளைகளில், தேவகுரலொலி அவன் காதுகளுக்கு எட்டுவதுண்டு. அவனுடைய தேகசுகம் குன்றத் தொடங்கியது. அவ்விதநிலைமையில் தான் கனகாலம் சீவிக்கமுடியாதென்ற எண்ணம் அவன் மனத்திற் படுவதும் உண்டு. அவனுடைய அருமைப்பெருமையான பிள்ளைகளும், பொறுமையே உருவான புண்ணியவதியாகிய அவன் மனைவியும் ஒருநல்ல பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ளும்படி அவனை அலட்டி அலட்டிக் கேளாதகாரணமே கிடையாது என்னலாம். அவ்வவ்வேளைகளில தேவவரப்பிரசாதஉதவி அவனைச் சற்று அருட்டிவிடுவதுண்டு. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளாது, மனம் இளகும்வேளை ஆண்டவர்பக்கம் திரும்பாது, "என்ன அவதி; ஆறுதலாய்ப் பார்த்துக் கொள்ளலாம்; இப்போ என்ன குடிமூழ்கிப் போய்விட்டதா" என்று சொல்லிவிட்டு, முன்னேயிலும் பார்க்க வெதவெதப்பான நிலைமையிற் சீவித்துக்கொண்டு வந்தான்.

சிலமாதங்களுக்குப் பின் அவனுக்குக் கடுமையான வருத்தம் வந்துவிட்டது. தாயும், பிள்ளைகளும் தங்கள் செபங்களுடன் திருப்தியடையாது அவ்வூரில்உள்ள குருமாரையும், கன்னியாஸ்திரிகளையும் அவனுடைய சுகத்துக்காக—விசேஷமாய் ஆத்துமசுகத்துக்காக மன்றாடும்படி பரிவாய்க் கேட்டுக்கொண்டார்கள். கன்னியாஸ்திரிமார் தங்கள் விடுதிச்சாலை மாணவிகளுடன் சதாசகாயமாதாவுக்கு விசேஷநவநாட்செபங்கள் ஒதத்தொடங்கினர்கள். கேளாதிருக்கவே நமக்கு நன்மையெனக் காணும் யாவற்றையும் தமது தேவசுதனிடங் கேட்டடைத்து தருந்தாயார் உண்மையான பத்திவிசுவாசத்தோடு, முழுநம்பிக்கையோடு தம்மை அண்டிவந்து தங்களுக்கல்ல, பிறர்சிநேகத்தாற் தூண்டப்பட்டு மற்றவர்களுக்காகக் கேட்கும் ஆத்துமசரீரநன்மைகளைப் பெற்றுத்தரப் பின்நிற்பாவா? ஒருபோதும் இல்லை. நவநாட்செபம் தொடங்கின எட்டாம்நாள் இரட்டைச் சகாயங்கிடைத்தது. அதிசயத்துக்குரிய விதமாய் அந்தமனிதனுக்கு ஆத்துமசுகமும், சரீரசுகமுங் கிடைத்தன. அவன் ஒரு புதுமனிதனானன். சரீரம மாத்திரம் பூரணசுகம் பெறவில்லை. செத்துக்கிடந்த அவனுடைய ஆத்துமமும் உண்மையான உத்தானமடைந்தது.

இவ்வித அதிசயநன்மை ஏற்பட்டதினால் சதாசகாயமாதா மட்டில் அந்தக் குடும்பம் எத்தகைய நன்றித்துதி பாராட்டியிருக்குமென்று சொல்லவும் வேண்டுமா? தாயும், பிள்ளைகளும் அவளின்மகிமையைப் போற்றிப்புகழுகிறார்கள். ஏற்றித் துதிக்கிறார்கள்.

உங்கள் ஆவை தேவைகளில் ஆத்தும, சரீரதேவைகளில் சதாசகாயமாதாவை அண்டிச் செல்லுங்கள். அவ ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டா.

சுதேச வர்த்தமானம்

அரிசி இறக்குமதி குறையாது

இந்தப்பெரும்போகத்தில் ஏராளமானநெல் விளையுமென்றும், அதனால் முப்பதினாயிரம்தொன அரிசி விற்பனைக்கு வருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் இங்கே பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் அரிசியின் அளவு இந்தவருடம் குறைக்கப்படமாட்டாது. தற்போது இலங்கைக்கு அரிசிஅனுப்பும்நாடுகள் பர்மாவும், சீனாவுமே. இப்பெரும்போகத்தில் ஏராளமானநெல் விளைந்து; தேவைக்குமேற்பட அரிசி இருக்குமிடத்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் ஓர்பகுதியைப் பிறநாடுகளுக்கு விற்பனவுசெய்ய வேண்டிவருமாம். தற்போதைய நெற்செய்கை முயற்சி அதிகரிக்குமிடத்து, இறக்குமதிசெய்யும் அரிசியைக்குறைப்பதையிட்டு அடுத்தவருடத்தான ஆலோசிக்கப்படுமாம். அப்படிக்குறைத்தாலும் அடுத்தவருடம் சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யும் அரிசியின் அளவைத்தான குறைக்கமுடியும். ஏனெனில், அதனோடு செய்யப்பட்டுள்ள உடன்படிக்கை ஒவ்வொருவருடமும் புதுப்பிக்கப்படவேண்டியது. இப்போதைய உடன்படிக்கைப்படி, அடுத்தநான்கு வருடங்களிலும் பர்மாவிடமிருந்து இலங்கை வருடந்தோறும் இரண்டு லட்சம்தொன் அரிசி வாங்கியே தீரவேண்டும.

உருளைக்கிழங்குச் செய்கை

மாத்தளையிலே எலாகல்லதோட்டத்தைச்சேர்ந்த திரு. ஜி. எச் மூர் அவர்கள் அத்தோட்டத்திலே உருளைக்கிழங்கைச் செய்கைபண்ணி நலல பலன் கண்டிருக்கின்றார். அதனால் அவர் மாத்தளைப்பிரிவிலுள்ள றப்பர், தேயிலைத் தோட்டங்களிலும், கிராமத் தோட்டங்களிலும் அதனைப் பரக்கச் செய்கைபண்ணுமாறு பலரையும் ஊக்கப்படுத்தி வருகின்றார். முதன்முறையாக உருளைக்கிழங்கைச் செய்கைபண்ணி அடைந்துகொண்ட பலனல் ஊக்கம்அடைந்தவரான இவர் தற்போது ஓர்பெருந்தேசப்பரப்பிலே அதனைச் செய்கைபண்ணியிருக்கின்றார். இவரைக் கண்டுபாவித்து அன்கூம்புரு, உளுஸ்கிரியா, வரகந்தா, வறிப்போலா, ஸ்ரூச்தில்லா, குளோடாக், நாகலைத்தோட்டங்களிலும் உருளைக்கிழங்குச்செய்கை கடைபெறத் தொடங்கியிருக்கிறது. அங்குள்ளகமக்காரரும் மூன்றுமாதப்பயிரும், அதிக நீர்ப்பாய்ச்சல்வேண்டாததுமாகிய உருளைக்கிழங்கைச் செய்கைபண்ணுவதிலே கரிசனைகொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரே!

உங்கள் மகன்?

(சென்றவாரத் தொடர்ச்சி)

உங்கள் மக்களில் எந்த மகனுக்குத் தேவ அழைத்தல் இருக்கும்?

உங்களால் அதிகம் நேசிக்கப் படுகிறவனும், பலமும், உறுதியும், உதாரமும், பரிசுத்தமனமும், படிப்பில் தீவிர அநுகூலமும்உள்ள அந்தமகனே தேவ அழைத்தலுக்குரியவனுகக்கூடும். கடவுளின் சகலகொடைகளையும் பெறற அந்தமகனே அந்த அழைத்தலுக்குச்செவிகொடுக்க விடுங்கள். இருமைபைக் காந்தம் இழுப்பதுபோல் உங்கள்மகனே மென்மையாகவும், இனிமையாகவும் ஆண்டவர் தம்பக்கம் இழுக்கின்ரூர். வெகுவாய்ச் சிந்தித்தும், புத்திமதிகளைக் கேட்டும் தன்னே ஆண்டவருக்கு அர்ப்பணம்பண்ணுகின்ரூன் அந்த மகன். விடுவிடுங்கள், அவனே உங்கள் உத்தமபுத்திரன். அவன்,ஒருகுருவாகஉங்கள்முன தோற்றமளிக்கும்போது உங்கள் மனம்எவ்வளவுபூரிப்புஅடையும்! அதுவல்லவோ பேரானந்தம்!

இப்படிப்பட்டமகனைத் தேவனுக்குக்கொடுக்க மறுக்காதீர்கள். தேவனே அவனைத்தந்தார். இப்போது தரும்படிகேட்கின்ரூர். இப்படித் தேவனுக்குக்கொடுத்தால் மகனே இழப்பதாகும் என்று நினைக்கவேண்டாம். ஒவ்வொருகுடும்பமும் ஒவ்வொருகுரவரை உடையதாயின் அதுவன்ரோ அந்தந்தக் குடும்பத்தின் பெருமை. தன்னைப் பெற்ற தந்தைக்கும் தாய்க்கும், ஒரேஇரத்தமோடுகின்ற சகோதரங்களுக்கும் ஞானஒளிவீசும் ஞானசூரியனக விளங்குகின்ரூன் குருப்பட்டம்பெற்ற மகன்.

கத்தோலிக்க சமூகத்திற்குத் தான் எவ்வளவுநன்மை! ஆயிரக்கணக்கானபூசைகள் ஒருகுருவானவரால் நிறைவேற்றப்படுகின்றன. அவரிடமிருந்து பெறும் தேவதிரவியஅநுமானங்களினல் நன்மைபெறுவோர் அநந்தமபேர்கள். நற்பிரசங்கங்களைக்கேட்டு மனந்திரும்புவோர் அநந்தம்பேர். இவறறால் வரும் புண்ணியபலன்களின் பங்கு பெற்ரூர்க்குமுண்டு.

இடைவிடாது செபியுங்கள். உங்கள்மகனின் இருதயத்தில் தேவநேசம் வளரவிடுங்கள். அந்த விலைமதிப்பற்ற தேவ அழைத்தல் வேரூன்றவிடுங்கள். அதனைவரவேற்று நன்றியுரை கூறுங்கள். ஆனல்,விழிப்பாயிருங்கள்; வேரூன்றியதேவஅழைத்தல் கிளைத்துவளர்ந்து நற்கனி தருமளவும் பாதுகாவலாக இருங்கள். நற்கனிதந்தால் "இன்னுமோர் குருவானவர்கூட" என்று பேரானந்தர் கொள்ளுங்கள். எம்மைப்பாதுகாக்கும் சர்வேசுரனின் அண்மையில் சீவிக்கும் உங்கள்மகன் உங்களை அவரண்டையில சேர்த்துவைப்பார் என்று உறுதிகொள்ளுங்கள்.

பெரு மகிழ்ச்சி

ஆயிரக்கணக்கான மக்களின் ஆதரவுமங்களை ஈடேற்றிய உங்கள்மகனுகிய குருவானவர் நடத்தீர்வைநாளன்று சர்வேசுரன் முன்னிலையில் உங்களுக்காகப் பரிந்துபேசுபவராகக் காட்சியளிக்கும்போது, கத்தோலிக்க பெற்ரோரே! உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகுமென்பதைச் சிந்தித்துப்பாருங்கள். இதைநினைக்குமபோதே உங்களுக்குப் பேரானந்தம உண்டாகவேண்டுமே. பரலோகசன்மையைக்கருதிப் பூலோகநிலையற்ற சன்மைகளைப் பரித்தியாகம் பண்ணித் தேவஅழைத்தலைத் தங்கள்மகனிடத்தில் உதிக்கச் செய்தபெற்ரோர் பலிபீடத்தில் தங்கள்மகன்நின்று பூசைநிறைவேற்றுதலைப் பார்க்குபோது உண்டாகும் பெருமகிழ்ச்சிக்கு ஈடுதான்என்னே!

பாருங்கள் ஓர் தாயானவள் தனதுமகனின் முதற்பூசையன்று எழுதியகடிதத்தை:—

"தேவனுக்கு ஸ்தோத்திரம், இப்போதுநான் ஓர் குருவானவரின் தாயார். என்மகன் பிறந்தஅன்று நான் அளவிலா மகிழ்ச்சி கொண்டேன். ஆனல், இன்ரே வெகு உன்னதமான பெருமகிழ்ச்சி என்னைப்பரவசப்படுத்துகின்றது. அன்று கொஞ்சிக்குலாவிய அச்சிறுகைகள் இன்று நிதியசீவியஅப்பத்தை ஏந்துபகைகளாக அபிஷேகஞ் செய்யப் பெற்றுள்ளன ..... அதோநிற்கிரூர். அத்தோற்றத்தில் என்னபெருமை! நாலே வெகுஅண்மையில இருந்தேன். ஆடாமல் அசையாமல் இருந்தேன். விழித்தேன். திவ்விய அப்பத்தின்முன் மூழ்தாட்பணிவதைக் கண்டேன. என்னை செபம்செய்ய முடியவில்லை. சர்வேசுரா! உமக்கே என்நன்றி. இக்குரவர் என்மகன், நானே இவரை உருவாக்கினேன். ஆனல், இனிமேல் இவர் என்சொந்தம அலல. உம்முடையவரே. தீமையில்நின்று இவரைக்காத்தருளும். பின்னர் தேவநற்கருணை நேரத்தில் தேவனைக் கையில்ஏந்தியவாறு எனக்குநேரே வந்தார் — என்பிதாவே! என்மகிழ்ச்சி அளவுகடந்துவிட்டது. நான் மகிழ்ச்சியடைந்தநாட்கள் பலவுண்டு. ஆனல், இன்றுபோலஒருநாளும் நான்மகிழ்ந்ததேயில்லை. ஆண்டவருடன் நித்தியசீவியத்தை எப்படி ஒருவர் அனுபவிக்கக் கூடுமென்று இன்றுகண்டு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

தாயே வரம் தாரும்

'யுவன்' — காப்பொன்

1. பொன்னே! ராஜேஸ்வரீ! கன்னிகையே! வரம்
பூண்டவளே எங்கள் ஆண்டவளே
அன்னேபேர் அன்பு நிறைந்தவ ளேயுன்றன்
ஆண்டிற் பலவரம் வேண்டுகிரூம்.

2. பாவிகட்கா யுன்றன் பாலகனூர் பட்ட
பாடுகளா லுற்ற பேறுபலன்
பூவிலெல் லோரும டைந்திட வேயருள்
பூண்டி டம்மாளமை ஆண்டிடம்மா!

3. கற்றவருங் கல்வி அற்றவருங் கத்தர்
காட்டிய பாதையை விட்டிறங்கி
மற்று மொருவழி செல்லுகிரூர் இதை
மாற்றும் அம்மாவழி காட்டுமம்மா!

4. சுற்று மிரும்புத் திரையினுள் ளேதுயர்
சூழச் சிறையிலே வாழ்பவரைப்
பற்றி இருகரத் தாவுகொ டுத்தவர்
பாடு களைந்திட வேண்டுமம்மா!

5. தேசத்தி லேமுத லாளிதொ ழிலாளி
சேர்ந்து வளர்ந்திடச் செய்யுமம்மா!
நேசத்தி லேயவர் நெஞ்சங் கலந்திட
நின்னருள் மாரிபோற் பெய்யுமம்மா!

6. பிஞ்சு மனத்திலே நஞ்சு தெளித்திடும்
பித்தர் தெளிந்திட உத்தமராய்ச்
சஞ்சலஞ் செய்சவுல் தன்னையே மாற்றிய
சற்குரு ஆகிநீ தந்திடம்மா!

7. பாவிகட் கோர்தஞ்சம் நீயல்ல வோமுழுப்
பாருக்கும் நீநேசத் தாயல்லவோ
சாவிலும் தேறுதல் நீயல்ல வோஎங்கள்
சஞ்சலம் போக்கிட வேண்டுமம்மா!

இலக்கியப்பரிசுகள் 1953-54

தூத்துக்குடி, தமிழ் இலக்கியக் கழகம்
1954-ம் ஆண்டில் கீழ்க்கண்டபரிசுகளை வழங்கும்.

1. நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர் ஆராய்ச்சிப்பரிசு.

1. கிழ்க்கண்ட ஏதேனும்ஒரு பொருள்பற்றி முதல்நூலாக எழுதப்படும் சிறந்தஆராய்ச்சிநூலுக்கு நபா ஆயிரம பரிசு அளிக்கப்படும.

(அ) தமிழ்இலக்கியத்துக்குக் கத்தோலிக்கர் செய்ததொண்டு.
(ஆ) அந்தோனிக்குட்டி அண்ணாவியாரின் வாழ்க்கைவரலாறும் நூல்களும்.
(இ) சவரிராயலு நாயக்கரின் வாழ்க்கைவரலாறும், நூல்களும்.
(ஈ) நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசரின் வாழ்க்கைவரலாறும், நூல்களும
(உ) வேதநாயகம்பிள்ளையின் வாழ்க்கைவரலாறும், நூல்களும்.

2. இவ்வாராய்ச்சிநூல் இருபத்தைந்து வரிகள்கொண்ட 250 பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்.

2. கத்தோலிக்க கதைநூலுக்கு முனிசீப் வேதநாயகம்பிள்ளை பரிசு.

1. ஆங்கிலம், பிறெஞ்சு, இத்தாலியமொழிகளில் முதல்நூலாய் எழுதப்பெற்றுள்ள தலைசிறந்த கதைநூல்ஒன்றின் சிறந்த மொழிபெயர்ப்புநூலுக்கு நபா ஐந்நூறு பரிசு அளிக்கப்படும்.

3. கத்தோலிக்க திருத்தொண்டர் வரலாற்றுக்கு அர்ச். அருளானந்தர் பரிசு.

1. கீழ்த்திசைமக்கள் விரும்பக்கூடிய பத்தி அர்ச்சியசிஷ்டர்களின் வரலாறு அடங்கிய சிறந்தநூல்ஒன்றுக்கு நபா ஐந்நூறு பரிசு அளிக்கப்படும்.
அர்ச்சியசிஷ்டவாகளைத் தேர்ந்தெடுத்தல எழுத்தாளர்பொறுப்பு.

2. கையெழுத்துப்பிரதி, குறைந்தது பக்கத்துக்கு இருபத்தைந்து வரிகள்கொண்ட 400பக்கங்கள் உடையதாய் இருத்தல்வேண்டும்.

பொதுவிதிகள்

1. கையெழுத்துப்பிரதிகள் தூத்துக்குடி தமிழ்இலக்கியக்கழகச் செயலாளருக்கு 1954 ஜூனி 30-ம்நாளுக்குமுன் அனுப்பப்படவேண்டும.

2. குறிப்பிட்டஒருபரிசுக்கு அனுப்பப்பட்ட கையெழுத்துப்பிரதிகளில் எதுவும் குறைந்தஅளவு தகுதியேனும் பெறவில்லையாயின் அப்பரிசு கொடுக்கப்படமாட்டாது.

3. பரிசுபெற்ற கையெழுத்துப்பிரதியின் எல்லாஉரிமைகளும் தமிழ் இலக்கியக் கழகத்திற்கே.

4. பரிசு 1954 மார்கழிமாதம் வழங்கப்படும்.

5. எந்தச்சமயத்தவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி

சேவியர் தனிநாயகம்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

அண்ணை சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

"உங்களுடைய சகோதரருக்கு மனதார மன்னிப்புக் கொடாவிடில் என்னுடைய பரமபிதாவும் உங்களுக்கு மன்னிப்புக் கொடுக்க மாட்டார்." இது சுவிசேஷ வாக்கியம். பிறர் குற்றத்தை மன்னிக்கச் சொல்லும் "பொன்மதி." பரமண்டலம் சொல்லும் பொழுது இதை நினைவுகூருகிறோம். நீங்கள் சொல்லுவதை உணர்ந்து சொல்லுகிறீர்களா? குற்றஞ் செய்தவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்து, அவர்களுடன் திரும்பவும் சகபாடிகளாக நடந்து கொள்ளுகிறீர்களா?

மன்னிப்பது கஷ்டந்தான். ஆகையால் தான் "குற்றஞ் செய்வது மனிதஇயல்பு; மன்னிப்பது தேவஇயல்பு" என்று ஓர் முதுமொழி உண்டு. கிறீஸ்துவைப் பின்பற்றுகிற நாம் "தேவ இயல்பை" த் தேடவேண்டும்.

வீரர் மாத்திரமே மன்னிக்க அறிவார்கள். அதுவே மனிதன் அனுசரிக்கக் கூடிய உத்தம புண்ணியம். மன்னிப்பு — இதைவிட மேலான அன்பும் உண்டோ?

உங்கள் அன்புள்ள, அண்ணை.

சின்னக் குழந்தை

I

சின்னக் குழந்தையினைக் கண்டால் — என்
சிந்தையிலே அன்புவிளை யாடும்
மின்னும் தளிர்க்கரங்கள் தொட்டால் — என்
மேனியிலே இன்பமுகில் மூடும்.

II

அன்புக் குழந்தையினைக் கண்டால் — நான்
ஆர்வமொடு போயணைத்துக் கொள்வேன்
துன்பத் துளிஅறியாப் பாலன் — தரும்
தூய்மையிலே நான்மலர்ச்சி கொள்வேன்.

III

பஞ்சுக் குழந்தையினைக் கண்டால் — விழிப்
பார்வையிலே நான்மயங்கிப் போவேன்
குஞ்சுக் குழந்தையினைக் கண்டால் — அதன்
கொஞ்சுமொழித் தேன்பருகிப் போவேன்.

IV

தங்கக் குழந்தையினைக் கண்டால் — நான்
தன்நினைவு தான்இழந்து போவேன்
அங்கம் சிலிர்த்துணர்ச்சி கொள்வேன் — என்
ஆனந்தம் எவ்வகையிற் சொல்வேன்.

"ஜெயம்"

ஆண்டவரே! எம்மைக் காரும்

ஒருநாள் யேசுநாதரும், அவருடைய சீஷரும் படகு ஒன்றில் ஏறிக் கலிலேயாக் கடலிலே பிரயாணஞ் செய்துகொண்டிருந்தனர். யேசு நித்திரையாய் இருந்தார்.

அவர் நித்திரையாய் இருக்கும் பொழுது பெரிய புயல் ஒன்று கிழம்பியது. அலைகள் எழும்பின. படகைப் பலவாறாய் அடித்தன. யேசு எழுந்திலர்.

சீஷர் பயந்தார்கள். அலைகள் மலைபோலவும், படகு காய்ந்த சிறுகுச்சுப் போலவும் காணப்பட்டன. கடலில் அமிழ்ந்தி விடுவோம் என்று சீஷர் கலங்கினார்கள்.

ஆகையால் அவர்கள் யேசுவை எழுப்பினார்கள். "ஆண்டவரே! எம்மைக் காரும்; நாங்கள் அமிழ்ந்தி விடப்போகிறோம்" என்று கெஞ்சினார்கள்.

யேசு அவர்களை நோக்கி: "அற்ப விசுவாசிகளே! ஏன் கலங்குகிறீர்கள்?" என்று கேட்டார். படகில் நின்று காற்றுக்கும், கடலுக்கும் கட்டளை இட்டார். புயல் அமர்ந்தது. அலைகள் அடங்கின.

யேசு சகல ஆபத்திலும் நின்று எங்களைக் காப்பார். சீஷரைச் சேமமே காத்தார் அல்லவா? அவருக்கு எல்லாச் சிருட்டிகளின் மேலும் அதிகாரம் உண்டு. தம்முடைய வல்லபத்தை விசுவசிக்க வேணும் என்று யேசு கேட்கிறார்.

(அடுத்த ஞாயிற்றுச் சுவிசேஷத்தை அவதானியுங்கள்)

— எம். ஜெயம்.

காணிக்கைத்திருநாள்

ஒவ்வொரு குடும்பத்திலும் உதிக்கும் தலைச்சன் ஆண்பிள்ளையைத் தேவாலயத்துக்குக் கொண்டுவரவேண்டும். அவனை அங்கு தேவனுக்குக் காணிக்கையாக்க வேண்டும். இது யூதரிடையே வழங்கி வந்த பழைய கட்டளை.

குசையப்பரும், கன்னிமரியதாயாரும் யேசுபாலகனைக் கோவிலுக்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது அவர் நாற்பது நாள் குழந்தையாய் இருந்தார். அங்கு யேசுவும், அவர் தாயாரும் தாய்மாருக்கும், புதுக்குழந்தைகளுக்குமுரிய ஆசிபெற்றார்கள். இதைச் சுத்திகாரத்திருநாள் என்றும் சொல்லுகிறோம். (மாசி 2-ந் திகதி)

வர்த்தி மந்திரித்தல்

சுத்திகரத் திருநாள் அன்று குருவானவர் மெழுகுவர்த்திகளை ஆசீர்வதிக்கிறார். சனங்களுக்கு அவைகளைக் கொடுக்கிறார்.

ஒவ்வொரு வீட்டிலும் மந்திரிக்கப்பட்ட மெழுகுதிரி இருக்க வேண்டும். ஆபத்துவேளை அது உதவும். குருவானவர் உங்கள் வீட்டிற்குத் தேவற்கருணை கொண்டுவரும் பொழுது அந்த மெழுகுதிரியைக் கொளுத்தி அவரை வரவேற்க வேண்டும். வியாதிக்காரருடைய அறையிலே அதை எப்போதும் வைத்திருங்கள். புயல் அடிக்குப் பொழுது தேவஉதவியைத் தேட மந்திரித்த மெழுகுதிரி கொளுத்துவது நல்லது.

உங்கள் வீட்டிலும் ஆசீர்வதிக்கப்பட்ட திரியொன்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஆசையின் அனுகூலம்

இரு பாடசாலை நண்பர்கள் பலவருடங்களுக்குப்பின் ஓர் விழா வேளையில் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். இருவரும் வெகு நேரம் தங்கள் பாடசாலைச் சீவியத்தை ஞாபகப் படுத்திப் பழைய அனுபவங்களைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

ஒருவன் கேட்டான்: நண்ப, உன் பாடசாலைப் பருவ ஆசைகளில் ஏதும் நிறைவேறியதா?

மற்றவன் சொல்லுவான்: ஆம், என் தாயார் எனக்குத் தலைசீவும் பொழுது, தலையில் மயிரே இல்லாமல் போய்விட வேண்டும் என்று அப்பொழுது ஆசித்தேன்; அது நிறைவேறி விட்டது.

* * *

சிலுவை அடையாளம்

பல வருடங்களின் முன் கிரேக்க நாட்டிலே ஓர் பட்டணத்தில் பயங்கரமான விதமாக வெள்ளம் பெருகியது. ஆறு கரைபுரண்டு அணைகளை உடைத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. எங்கும் வெள்ளப் பிரவாகமாய் இருந்தது. சனங்கள் பயப்பிராந்தி கொண்டு ஆர்ச். இல்லறியாரைத் தேடி ஓடினார்கள். தங்களுக்கு உதவி செய்யும்படி அவரை வேண்டினார்கள். "எங்களுக்கு உயிருள்ள விசுவாசம் இருந்தால் தேவன் கட்டாயம் எங்களைக் காப்பாற்றுவார்" என்றார் அந்த அர்ச்சிய சிஷ்டர்.

பின்னர் முழந்தாள் இட்டுச் செபம் செய்தபின் வெள்ளம் பெருக்கு எடுத்து ஓடிக் கொண்டிருந்த ஆற்றின் மேல் மூன்றுமுறை சிலுவை அடையாளம் வரைந்தார். வரைந்ததும் என்ன சம்பவித்தது தெரியுமா? கரைபுரண்டு ஓடிய தண்ணீர் அப்பால் செல்ல முடியாது திரும்பவும் மிருந்த அமைதியுடன் பின்காட்டிச் செல்லத் தொடங்கியது. என்ன அதிசயம்! தேவன் அவர்களைக் காப்பாற்றினர். எல்லோரும் அவருக்கு நன்றி செலுத்தினர். இந்தப் பெரிய புதுமையை அந்தச் சனங்கள் ஒருபோதும் மறக்கவே இல்லை. அவர்கள் அன்றுதொட்டுத் தங்கள் தொந்தரவு, கஷ்டங்களில் சிலுவை அடையாளம் வரைந்து, அதன் மூலம் தேவ உதவியைப் பெற்று வந்தார்கள்.

திவ்விய யேசுவும் எங்களை அதிகமாய் நேசித்த படியால் மனிதரின் பாவத்துக்குப் பரிகாரம் செய்யச் சிலுவையையே தெரிந்து கொண்டார். தமது ஆசீர்வாதங்கள், வரப்பிரசாதங்களைச் சிலுவை மூலமாகவே எங்களுக்கு அருளுகிறார். சிலுவையில் மரித்தே எங்களுக்கு மோட்ச பாக்கியத்தைத் திரும்பவும் பெற்றுத் தந்தார். ஆதலால் சிலுவை அடையாளத்தைக் கரகப் பசாசுகள் எல்லாம் பயந்து நடுங்கி ஓடுகின்றன.

இந்த மேலான மகத்துவம் பொருந்திய சிலுவை அடையாளத்தை அடிக்கடி வரைய நாம் பழகிக் கொள்ள வேண்டும். இரவிலே படுக்கைக்குப் போகமுன்னும், காலையில் படுக்கை விட்டு எழும்பும் போதும், செபம் தொடங்கும் போதும், செப முடிவிலும், பிரயாணத்தைத் தொடங்கும் போதும், பிரதான யாதொரு வேலையைத் தொடங்கும்போதும் சிலுவை அடையாளம் வரைந்துகொள்வது மிகவும் நல்லது. கல்லகத்தோலிக்க மக்கள் அநேகம்பேர் செய்வதுபோல பாவச்சோதனை வரும் சமயங்களில் சிலுவை அடையாளம் வரைவது, அந்தச் சோதனையில் வெற்றிபெற உத்தமமான ஓர்வழியாகும்.

பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினாலே ஆமென்.

— எம். ஜெயம்

வினைதனின் மனமாற்றம்

வினைதன் என்பான் முன்னொருநாள்
வெளியூ ருக்குப் புறப்பட்டான்
கணக்கக் கணக்க வெகுதூரம்
கால்நடை யாகச் சென்றிட்டான்
பங்குனி மாதம் வெய்யிலிலே
பதைக்கப் பதைக்கச் சென்றிட்டான்
உள்ளங் கால்கள் கொதித்திடவே
உள்ளங் கொதிக்கச் சென்றிட்டான்
ஐயோ! காண்போர் எல்லோரும்
அழகாய்க் 'கார்'ல் செல்கின்றார்
காலிற் செருப்பும் இல்லாதே
கடையேன் நானும் செல்கின்றேன்
எந்தன் வாழ்வும் ஒருவாழ்வா?
இறைவா! இதுவா உன்நீதி
என்று வினைதன் பலவாறாய்
எண்ணிக் கொண்டே சென்றிட்டான்
சிந்தை கொந்தே அவனும்தான்
செல்லும் வழியில் ஓர்புறமாய்
"ஐயா! கால்கள் இல்லாத
அனுதை என்னைப் பாருங்கள்
"சாமீ! பிச்சை போடுங்கோ
சாப்பாட் டுக்கோ வழியில்லை"
மூச்சுத் திணற இப்படியே
முடவன் ஒருவன் கெஞ்சுவதைப்
பார்த்தான் வினைதன் பதைத்திட்டான்
பழைய எண்ணம் வெறுத்திட்டான்
முடவன் நிலையைக் கண்டதும்தன்
முட்டாள் தனத்தை நொந்திட்டான்

'பொன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே அம்மா...?

விடுதலைமுடிந்து பாடசாலை தொடங்கிய நாள்முதல் கமலாவும், அயல்வீட்டுக் கனகாவும் சாயந்தரம் பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் கோவில் சென்று, அங்கு குடிலிலே வளர்த்தப்பட்டிருந்த சின்ன யேசு பாலனைச் சந்தித்து மிகுந்த பட்சத்துடன் கும்பிட்டு வணங்கிக் கொண்டு போவார்கள். போகும்போது இருவரும் தெவ்வியபாலனைப் பற்றியும், தேவமாதா, சூசையப்பர், மூன்று இராசாக்கள், இடையர்கள், கழுதை, மாடு, ஒட்டைகளைப் பற்றியும் மனதில் வந்தபடியே தங்கள் குதலை மொழிகளால் சந்தோஷமாகக் கதைத்துக் கொண்டு போவார்கள். அவ்வாறாக, ஓர்நாள் கமலா தன் தோழியுடன் கோவிலே விட்டு அவசரம் அவசரமாக ஓடோடியும் வீட்டுக்குச் சென்றாள்.

தனது அருமை மகளின் வரவை வீட்டிலே வழமைபோல ஆவலுடன் எதிர்பார்த்து நின்றதாய் அன்று அவள் இளைத்துக் களைத்து, சலித்து முழித்து வந்திருக்கக் கவனித்ததற்கு, என்ன கமலா, ஏன் இளைக்கிறாய்? எதற்காக ஓடிவந்திருக்கிறாய்? என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

கமலா புத்தகங்களை இடது கையால் அணைத்துப் பிடித்துக் கொண்டு, வலது கையால் கண்களைக் கசக்கிக் கொண்டு, அம்மா ம்ம்ம்.....என்று சிணுங்கினாள்.

என்ன கமலா நடந்தது? உள்ளதைச் சொல். சிஸ்டர் அடித்தாவா? கனகாவுடன் வழியிலே சண்டைபிடித்தாயா? வீதியிலேயாராவது உங்களை விரட்டினார்களா?

இல்லை.....அம்மா ம்ம்...

பின்னை ஏன் கண்ணைக் கசக்குகிறாய்? சொல் கமலா!

அம்மா கோவிலிலே தொட்டிலில் .....கிடந்த...பாலன்.....

தொட்டிலில் கிடந்த பாலன்...அப்பால் என்ன சொல்.

1

தொட்டிலும் இல்லை — தொழுவமும் இல்லை
தொட்டிலிற் கிடந்த பாலனும் இல்லை
எங்கே அம்மா சொல்லுங்கோ?

2

மாதாவும் இல்லை - தாதாவும் இல்லை
மாடாடும் இல்லை – மந்தையும் இல்லை
எங்கே அம்மா சொல்லுங்கோ?

3

அரசரும் இல்லை - இடையரும் இல்லை
அருகிலே நின்ற கழுதையும் இல்லை
எங்கே அம்மா சொல்லுங்கோ?

4

குடிலில் தோன்றிய வெள்ளியும் இல்லை
குளோறியா பாடிய சம்மனசில்லை
எங்கே அம்மா சொல்லுங்கோ?

உண்ணும் போதும், உறங்கும்போதும், படிக்கும் போதும், விளையாடும் போதும் கமலா இப்படியே நெடுகக் கேட்டுக்கொண்டு வருகிறாள். தாய் என்ன பதில் சொன்னாலும் கேட்கிறாளில்லை ஆகவே, "பாலர் பக்க"த்தில் இதைப் படிக்கிற பாலர்களாவது ஒரு நல்ல பதில் சொல்லி அவளைச் சாந்திப் படுத்த மாட்டார்களா?

— J. A. G.

மூளைக்கு வேலை

பன்னிரு எழுத்துக்களால் ஆன ஒரு பத்திரிகையின் பெயர்!

1-ம் எழுத்து பாசத்திலும் வரும்
நேசத்திலும் வரும்
2-ம் எழுத்து கத்தியிலும் வரும்
புத்தியிலும் வரும்
3-ம் எழுத்து பாதியிலும் வரும்
தாதியிலும் வரும்
4-ம் எழுத்து இயற்கையிலும் வரும்
செயற்கையிலும்வரும்
5-ம் எழுத்து வேதத்திலும் வரும்
வேகத்திலும் வரும்
6-ம் எழுத்து பாதத்திலும் வரும்
வாதத்திலும் வரும்
7-ம் எழுத்து பாகத்திலும் வரும்
பாவத்திலும் வரும்
8-ம் எழுத்து [illegible]துவிலும் வரும்
பாதுவிலும் வரும்
9-ம் எழுத்து [illegible]னத்திலும் வரும்
காலத்திலும் வரும்
10-ம் எழுத்து காவலிலும் வரும்
சேவலிலும் வரும்
11-ம் எழுத்து கலகத்திலும் வரும்
கலக்கத்திலும் வரும்
12-ம் எழுத்து என்னிலும் வரும்
உன்னிலும் வரும்.

விடை: சத்தியவேத பாதுகாவலன்.

சே. தியாகராசா
ரோ. க. பாடசாலை, முருங்கன்.

கண்ணீரின்இரகசியம்யாது?

புதவருடம் பிறந்தது. பழையபடி சிஸ்டர் செலினுக்கு ஏழாம் வகுப்புத்தான் கொடுக்கப் பட்டது. அவ படிப்பிப்பதில் சிலவருட அனுபவமே உள்ள ஓர்இளம் கன்னியாஸ்திரி. ஆனால், பெரும் விவேகி. ஏழாம் வகுப்புக்கு எதிரே காலாம் வகுப்பைச் செல்வி மெக்டலீன் ஆசிரியை படிப்பித்துக் கொண்டு இருந்தா. மெக்டலீன் ஆசிரியை என்றால் சொல்லவும் வேண்டுமா? கடை அலங்காரம் பார்என்று கடப்பா. உடை அலங்காரம் பார் என்று உடுப்பா. என்னிலும் வல்ல பெண் மண்ணிலும் உண்டோ என்று தனது அலுவல்களை முடிப்பா. இடையிடையே தனக்கு எதிரில் வகுப்பு நடத்தி வந்த சிஸ்டர் செலினைப் பார்த்துத் தனக்குள்ளே சிரிப்பா. இவ ஏன்உலக சுகசெல்வ பாக்கியம்எல்லாம் துறந்தா? அழகு இல்லை என்று? அறிவு இல்லை என்று? பணம் இல்லை என்று? பலம் இலலை என்று? குலம் இல்லை என்று? குணம் இல்லை என்று? இவைகள் எல்லாம இவவுக்கு நிறைய நிறைய உள்ளனவே. அப்படியிருக்க, இவ இந்தத்துறவற சீவியத்தை விரும்பிய காரணம் என்ன? சாதாரணமாக உலகில் ஆதரவற்ற அநாதைப்பெண்கள், அழகினர், பலவீனர், ஏழைகள் அல்லவோ இந்தச் சீவியத்தை நாட வேண்டும் என்று நினைப்பா. எனது எண்ணத்துக்கு இவ முழுமாறாய் இருக்கிறது என்று ஆழமாக யோசிப்பா. கடைசியாக அவ எப்படியும் சிஸ்டருடன் சம்பாஷித்து உண்மைக் காரணத்தை அறிய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டா. பிறகு சில பல வேளைகளில் சிஸ்டருடன் சம்பாஷித்துவந்தா. ஆண்டவர் தனக்குக் குலம், பலம், செல்வம் ஆதியன எல்லாம் தந்தது அவற்றைக் கொண்டு அவரை மகிமைப் படுத்தவே என்பதை எளிதில் சிஸ்டர் செலின் இவ அறியச் செய்தா. அதிலிருந்து மெக்டலீன் ஆசிரியையின் சீவியம் மாறத் தொடங்கியது. தனது பெயர் கொண்ட ஆச்சிய சிஷ்டவளைப்போல் தெவ்விய சற்பிரசாத நாதரைச் சந்தித்துத் தான் செய்த பிழைகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் சிந்துவா. இவ்விதம் அவ பலமுறை கோயிலில் அழுக் கண்ட பலர் இந்தக் கண்ணீரின் இரகசியந்தான் யாதோ எனஅறிய ஆசித்தனர். சிலர் அவவில் வீண் சந்தேகமுங் கொண்டனர். சர்வ வல்லப சருவேசுரன் எல்லாச் சந்தேகத்தையும் விரைவில் தீர்த்து, அந்த இரகசியத்தை வெளியாக்கி விட்டார். எப்படி? மெக்டலீன் ஆசிரியைதனது இடாம்பீக வாழ்க்கையிலே ஓர்நன்மையும் இல்லை என்றுஉணர்ந்து தனக்கு அருளப்பட்ட நல்ல ஏவுதலுக்குச் செவி சாய்த்தா. கடைசியாக அவ தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்து இப்போது ஓர் பரிசுத்த கன்னியாஸ்திரியாகத் தெவ்விய யேசுவின் திராட்சைத் தோட்டத்தில் ஊழியம் செய்து வருகிறா.

அர்ச். அன்னம்மாள் பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு, 13.

கேளாதவர்களுக்கு பிசாசு செய்த பிரசங்கம்

அன்பான மக்களே! "கேளாதவர்களுக்கு" என்று சொல்லி இந்தப்பிரசங்கத்தை நான் தொடக்கும்போது, ஏதோ காதுகேளாதவர்களுக்கு என்று நீங்கள் விளங்கப்படாது. ஆனால், இது காது இருந்தும் கேளாதவர்களுக்குத்தான என்று நீங்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். விளங்கியதா? "ரூஷியா ஏன் மனந்திரும்பவில்லை" என்று கேட்டுக் காவலன் ஆசிரியர் கடந்த இரண்டுவார இதழ்களிலும் எழுதியிருக்கிறார் அல்லவா? மக்களே! அந்தவிஷயம் நன்று, அன்று? இனிப்பா, புளிப்பா? கசப்பா, உறைப்பா? என்று நயசுகம்சொல்ல நான்இங்கு வரவில்லை. இது சத்தியம்.

நிற்க, பாத்திமாவிலே அன்று அந்த மூன்று பிள்ளைகளுக்கும் மாதாசொன்னதை நானும் ஒட்டிநின்று கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். தாம் சொன்னபடி, நீங்கள் நடந்தால் ரூஷியா மனந்திரும்பும்; உலகுக்குச் சமாதானம்வரும்என்று அவசொன்னவே. செபம், தபம், செபமாலைஎன்றெல்லாம் அழுத்திச்சொன்னவே. ஆனால்,செபம் என்றால், உங்களில் எத்தனையோபேர் ஓடி ஒளிக்கிறீர்களே. தபம்என்றால் உயிரே போவதுபோல் பயந்துசாகிறீர்களே. செபமாலை என்றால் அதற்கு என்னமதிப்புக் கொடுக்கிறீர்கள்? அதனைச்சொல்லத் தொடக்கியதும் கெடுங் கொட்டாவி விடுகிறீர்களே. நித்திரை தூங்கி விழுகிறீர்களே. சும்மா கடமைக்குச் சொல்வார்போல் வேண்டா வெறுப்பாய்ச் சொல்லிவருகிறீர்களே. அதுவும் கையில் ஒரு செபமாலை இல்லாமல். படக்காட்சி பார்க்க என்றால் உங்களுக்குப் பணம்உண்டு. காணிவல் என்றால், கண்காட்சி என்றால், வேடிக்கை என்றால், விளையாட்டம் என்றால் எதுவிதமும் பணத்துக்கு வழிகண்டு விடுகிறீர்கள். ஆனால், ஒரு செபமாலை வாங்குகிறதுஎன்றால் என்ன செய்கிறது? எங்கேபோகிறது? என்று இல்லாத பஞ்சம்எல்லாம் கொட்டுகிறீர்கள்.

இவ்வாறு நீங்கள் செய்து கொண்டு வரக் காண்பது எனக்குப் பெரும் ஆறுதல். அந்தக் கம்யூனிஸ்த ரூஷியாவிலே எனது ஆட்சி நீடித்து இருக்க வேண்டும் என்று நானும் நெடுமூழாந்தாள் இட்டு நேர்த்திபண்ணிக் கொண்டிருக்க, நீங்கள் இப்படிச் செய்வது எனக்கு ஆறுதல் மாத்திரம் அல்ல, சந்தோஷமும் பாருங்கள். இதற்காக உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். அடடா! ரூஷியாவாவது, மனந்திரும்புகிறதாவது. அப்படி ஒருகருமம் நடக்கவிட்டு நானும் கண்ணுறங்கிக் கிடப்பேனு? கைகட்டிப் பார்த்துக்கொண்டு இருப்பேனு? உயிரை உயிர்பாராது, மணலைக் கயிறுய்த் திரித்தாவது இந்தச் சாத்தான் (நெஞ்சிலே தட்டி) ஒருகை பார்த்தே தீருவான். இல்லாவிட்டால் கழுத்திலேசுருக்குப் போட்டு உயிருக்கு இறுதிகாணுவான். நிசம்.

மக்களே! இது ஒரு பழங்கதைதான். ஆயினும் அவ்வளவு பழங்கதை அல்ல. இருபத்தைந்து வருடங்களுக்குமுன் நடந்தது. அந்த மூசோலினி வந்தான், ஆட்சிசெய்ய இத்தாலியில். பாப்பாண்டவருக்கும், அந்த இராசாங்கத்துக்கும் நெடுங்காலமாக இருந்துவந்த பிணக்கைத் தீர்த்து வைத்தான். இதெல்லாம் அந்த மந்திர சக்தியால் நடந்தது. எந்த மந்திர சக்தியால் என்று என்னைக் கேட்பீர்களாக்கும். உங்கள் கோவில்களிலே பூசைமுடிவில் நீங்கள் சொல்லிவரும் அந்த மூன்று பிரபந்தத்தமுதலாம் மந்திரங்களின் சக்தியால்தான். பிறகு அந்த மந்திரசக்தியை ரூஷியாவின் பக்கமாகத் திருப்பிவிட்டார் அந்தப் பாப்பாண்டவர். அந்தச் சக்தி அநேகமாக உங்களுள் அநேகரின் தயவால் அதிகமாக வேலை செய்வதில்லை. எப்போது பூசை முடியும்? குருவானவர் எப்போது ஆசீர்வாதம் போடுவார்? என்று ஒற்றைக்காலிலே அந்தரத்தில் நின்று அந்த ஆசீர்வாதம் வாங்கினதும், வாங்காததுமாய் ஓடிப் போகிறீர்கள். குருவானவர் ஒருகதவில் நின்று தடுத்தால் நீங்கள் மறுகதவால் தப்பி விடுகிறீர்கள். அதனால் அந்த மந்திரங்களை ரூஷியா மனந்திரும்பும் படியாய் எல்லோரும் ஆர்வத்துடன் சொல்வதில்லை. அந்த மந்திர சக்தி பயன்படுவதில்லை. அப்போ ஆஹா ஹா ஹா ஹா எப்படி இருக்கிறது ரூஷியாவின் மனந் திரும்புதல்? நீங்களே சொல்லுங்கள். அந்தமந்திரங்களைக் கருத்தாகச் சொல்லாதவர்களும், பாத்திமாவிலே மாதாசொன்னதை அனுசரியாதவர்களும் ரூஷியா மனந்திரும்ப வேண்டும், உலகுக்குச் சமாதானம்வர வேண்டும் என்று விரும்புகிறவர்களா? இலலை. ஆயினும் எனது சார்பாக இவ்விதம் முட்டுக்கட்டை போடுவாருக்கெல்லாம் நான் பெருமகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். சுபம்!

— வேந்து

அவள் என்ன செய்வாள்

குடிலிலே சின்னயேசு தனியே இருப்பதைச் சிறுவன்ஒருவன் கவனித்தான். அவருக்கு வயிறு பசிக்கும்என அவன்நினைத்து, தனக்குக் கொடுக்கப்பட்ட பலகாரங்களில் சிலவற்றைக் கோவிலுக்கு எடுத்துச்சென்று அவரது குழந்தைக்கரங்களில் வைத்தான். கரங்கள் விரிக்கப்பட்டிருந்தன. பலகாரங்களை ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக அவர் தமதுகைவிரல்களை மடக்கவில்லை. சிறுவன்வைத்த நிலையிலேயே பலகாரங்கள் இருந்தன. "வைத்துக்கொள்ளும், வைத்துக் கொள்ளும்" என்று சிறுவன் சொல்லியும் சுரூபத்தின் கைவிரல்கள் அப்படியே இருந்தன. சிறுவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆத்திரத்துடன் தானே அத்தனைவிரல்களை மடக்கினன். அவை அனைத்தும் ஒடிந்துவிட்டன. பயத்துடன் தாயிடம் ஓடிப்போய் நடந்ததைச் சொன்னன். அவள் என்ன செய்வாள்?

— S. E.

* * *

— ஜேர்மன் கிறேன் சேர்க்கள் தற்போது ரோமைநகரிலே ஆட்டம் நடத்திவருகின்றது. அன்று இதனைச் சேர்ந்த அந்தரவிளையாட்டுக்காரரும், கோமாளிகளும், சிங்கம் ஆதியவற்றைப் பழக்குவாரும், பிறருமாக 300 பேர் வத்திக்கான்மாளிகை சென்று பரிசுத்தபிதாவின் விசேஷபேட்டி பெற்று அதன்மேல் சம்பேதுருவானவர் மகாலயத்தைத் தரிசித்துத்திரும்பினர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

GOVT. TENDERS

Jaffna Kacucheri

N 136-Sealed tenders will be received by G. A., N. P., Jaffna, up to 12 noon on 15.2.54 for the exclusive right of selling tickets for the Nainativu and Delft Motor Launch Service for the period 1. 3. 54. to 31. 12. 54. both days inclusive. For particulars see Part 1 - Section II, Govt. Gazette, 22. 1. 54.

பெற்றோரே! உங்கள்மகன்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டேன். மேலும் என்னால் எழுதமுடியவில்லை. விடைபெறுகின்றேன்.

இங்ஙனம்

உலகத்தின் சந்தோஷமிக்க தாய்.

ஆண்டவரே! எங்கள் குடும்பத்தை உமக்கேஒப்புக்கொடுக்கின்றோம். எங்களபுத்திரர் வயதில் முதிர்ச்சியடைவது போல் புத்திவிமரிசையிலும், தேவஅருளிலும் முதிர்ச்சியடைய அருள்கூரும். எங்கள்புத்திரரில் ஒருவர் தேவஅழைத்தலுக்குப் பாத்திரராகுமாறு அவருக்குவேண்டிய ஒத்தாசை தூண்டுதல்எல்லாம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

(200 நாட்பலன்)

பிரியாவிடைவிழா

கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக உரும்பராய்க் கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியராகவிருந்து அருஞ்சேவை ஆற்றிவந்துள்ள திரு. எஸ். கே. இராசேந்திரம் அவர்கள் மற்றோர் பாடசாலைக்கு மாற்றஞ் செய்யப் பெற்றதைபிட்டு, இம்மாதம் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை இவ்வூர்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், மற்றோரும் அவருக்கு ஓர்பிரியாவிடை விழா கடத்தினர்கள். புதியதலைமை ஆசிரியர் பி. அருளானந்தம் அவர்கள் மலர்மாலைசூட்டி வரவேற்றதும் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த உயராசனத்தில் பிரியாவிடைகாயகர் அமர்ந்ததும் உள்ளத்தை உருக்கும் பிரியாவிடைக்கீதங்கள் பாடசாலைச் சிறுவர்களால் படிக்கப் பட்டன. பிரியாவிடைப்பத்திரம் படித்துக்கொடுக்கப் பட்டது. ஆசிரியராலும், மாணவராலும் சிறந்த அன்பளிப்புகள்பல வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் பி. அருளானந்தம், என். இராசேந்திரம், கே. கந்தையா, பி. எஸ். லோறன்ஸ் என்பவர்கள் நிகழ்த்தியபேச்சிலே பிரியாவிடைகாயகரின் பதின்மூன்றுவருட சேவையின் சிறப்பையும், அதனால் பாடசாலையும் ஊரும் அடைந்த நன்மைகளையும், அவரின் அன்பு, தர்மசிந்தை, சிறந்த பண்பையும் பாராட்டிநின்றனர். மாணவர், மாணவிகள் பலரால் இனியபேச்சுக்கள், மனதைக்கவரும் ஆடல்பாடல்கள் நடைபெற்றன. ஈற்றில், பலத்த கரகோஷத்தினிடையே எழுந்த பிரியாவிடைகாயகர் தமக்குச் செய்யப்பட்ட வைகளுக்காக நன்றிகூறி நின்றார். ஈற்றில் பரிமளிப்பான தோட்டோப சரணையுடன் விழா இனிதே நிறைவேறியது. — நிருபர்.

விளம்பர விகிதம்

	ரூ.	ச.
நன்றியறிதல்ஸ்தோத்திரம் ...	2	00
மரணஞாபகம் ஒரு அங். ...	2	00
ஓடர் நிசி (Order Nisi) இரண்டுமுறைக்கு ...	10	00

முற்பணம் கட்டவேண்டும்

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
ச. வே. பாதுகாவலன்.

அறிவுச் சுடர்

1. ஆகாயவிமானிகளின் பாதுகாவலர் யார்?

லெறெத்தோ மாதா.

2. அமெரிக்காக் கண்டத்திலே முதன்முதலாகத் திவ்வியபூசை எப்போது நிறைவேறியது?

ஹெயிற்றிதீவிலே 1493-ம் ஆண்டிலாகும்.

3. யாத்திரிகர்களின் பாதுகாவலர் யார்?

அர்ச். பெரியயாகப்பர்.

4. மனிதரின் தலையில் சராசரியாக எத்தனைமயிர்கள் இருக்கின்றன?

1 லட்சத்து 20 ஆயிரம் மயிர்கள் இருக்கின்றன. இவைகள் ஒவ்வோர் 17 நாட்களுக்கும் ஏறக்குறைய ஒரு சென்டிமீற்றர் வீதம் வளருகின்றன. ஒருசென்டிமீற்றர் என்றால்—அதாவது 0.3937 அங்குலத்தின் நூறில் ஒருபங்காகும்.

5. வருடம்ஒன்றுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் மொத்தவருமானம் எவ்வளவு?

கற்போது நடக்கும் நிதிவருடக் கணக்கின்படி, அமெரிக்க அரசாங்கத்தின் மொத்தவருமானம் 33,938 கோடிரூபா. இதில் நூற்றுக்கு 43 வீதம தனிப்பட்ட ஆட்களிடமிருந்து வருமானவரியாகவும், 39 வீதம் கம்பெனிகளிடமிருந்து வரியாகவும், எஞ்சிய 18 வீதமும் தறைமுகவரி, மதுபானவரியாகவும் கிடைத்ததாகும்.

6. எங்காவது நாயும் இராசாவாக வந்ததுண்டா?

ஆம், இந்தியாவிலே சற்றறு சமஸ்தானத்தின் ஷாகு மகாராஜா (1682–1749) ஓர்முறை யானைஒன்றால் தாக்கப்பட்டார். அப்போது அவர்வளர்த்துவந்த ஓர்இன வேட்டைநாய் அவரைப் பாதுகாத்துவைத்தது. அதற்கு நன்றியாக அவர் தமது சொந்தஇராசதலைப்பாகையை அதன்சிரசில் சூட்டினர். தம்முடைய முத்துமாலைகளை அதன்கழுத்தில் நான்குமடிப்புகளாகப் போட்டார். வருடம் ஒன்றுக்கு 50,000 டலர் வருமானம் அதற்குக் கிடைக்கச்செய்தார். அம்மட்டா! அதனை இருபதுக்குமேற்பட்ட இராமங்களுக்கு ஓர் இளவரசராக்கியும் வைத்தார்.

7. தங்கத்தாலே பல்லுக்கட்டிக் கொள்வது வழக்கம். ஆனால், தங்கத்தாலே மூக்குக்கட்டினவரும்உண்டா?

ஆம் உண்டு. தென்மார்க்குதேச பேரானவானசாஸ்திரியான டைச்சோ பிறுஹி என்பவர் மற்றொருவருடன் குஸ்திபோட்டுக்கொண்டபோது தனது மூக்கை இழந்துபோனார். பிறகுஅதற்குப்பதில் சுத்த தங்கங்கொண்டு போலி மூக்கு தஒன்றுசெய்து போட்டுக்கொண்டார்.

8. "குத்தண்டஇராச இருதயம்" என்பதுஎன்ன?

இது ஒருசத்திரத்தின் பெயர். பிரான்ஸ்தேச நான்காவது ஹென்றி அரசர் 1610-ம் ஆண்டு ஓர்சத்திரத்தின்முன்பாகத் தனது இருதயத்தினூடாகக் குத்தப்பட்டார். அதுமுதல் இந்தச்சத்திரம் அப்பெயரைக்கொண்டிருக்கிறது.

9. பெத்லகேமில் தற்போது ஓர் புதியகோவில் கட்டப்படுகிறது. அது எங்கே?

முதலாவது கிறிஸ்மஸ்அன்று இடையர்களுக்குச் சம்மனசுகள் காட்சியளித்த இடமென்று பரம்பரையாக அறியப்பட்டுவருவதும், பெத்லகேமுக்குக் கிழக்கே இரண்டுமைல் தூரத்தில் உள்ளதுமான இடையர்களின் வயல் வெளியில்தான். இது கனடாதேசக் கத்தோலிக்கர் உதவிய பணங்கொண்டு நட்சத்திரவடிவமான ஓர்சிற்றாலயமாகக் கட்டப்படுகிறது.



இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

சிலோன் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிட்டெட்,
தலைமை ஆபீஸ்:
69, இராணி வீதி — கொழும்பு.
Ceylon Insurance Co. Ltd. 69. Queen St., Colombo

திருமணம்

புத்தளத்தைச் சேர்ந்த ஏத்தாணையிலே ஓர்ஆயுர்வேத வைத்தியராகிய திரு. எஸ். அத்தோனிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், புத்தளஆஸ்பத்திரியில் ஓர்மிகதருமான திருவளர்செல்வன் பெட்டி றேசாய்றேவுக்கும், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியில் லிகிதராகக் கடமைபார்க்கும் திரு. எவ். பேதுருப்பிள்ளையவர்களின் சிரேஷ்டபுதல்வியும், கெடுத்தீவுக்காரியாதிகாரியான திரு. பி. எல். பற்றிக் அவர்களின் சகோதரியுமான திருவளர்செல்வி ஜூலிஸ்ரினு யோசேப்பினுக்கும் சென்ற 25-ந் திகதி திங்கட்கிழமைகாலை 7-30 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே, குருப்பிரசாதிகளும், இனசனர் சிநேகிதர்களும் பெருந்திரளாகக் கூடியசமூகத்திலே அதிவண. எஸ். இம்மனுவேல் சுவாமியவர்களால் திருமணவைபவம் மங்கலகரமாக நிறைவேறியது. திவ்வியபூசையின்பின் புதிய தம்பதிகள் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று, மோட்டர்ரத ஊர்வலமாக அழகேமயமாய்விளங்கிய மணமகள் மன்றல்மனைசேர்ந்து சம்பிரமமாக உபசரிக்கப்பெற்றார்கள். அத்தருணம் பலாலி, அரசினர் ஆசிரிய கல்லூரிப் பேராசிரியர் பி. எம். வேதநாயகம் அவர்கள் இன்பகரமாக ஓர்சொற்பொழிவாற்றிப் புதுமணத் தம்பதிகளுக்குச் சோபனங்கூறினார். இப்புதிய குடும்பமானது அஷ்டஐஸ்வரியங்களும்பெற்றுவாழ அமலன் திருவருள் பாலிப்பாராக! — நிருபர்

யாழ்ப்பாணர், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

1. (அ) 1954-ம்ஆண்டுப் பரீட்சைவிதிகள், பாடவிதானம் என்பன தேவைப்படுவோர் 25 சதமுத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முத்திரை இன்றிக் கடிதம் எழுதுவோர்க்குப் பதில் அனுப்பப்படமாட்டாது.

   (ஆ) 1951, 52, 53, 54-ம் ஆண்டுகளுக்குரிய பரீட்சைவினுக்கள் தேவைப்படுவோர் ஆண்டொன்றுக்கு ரூபா 1/ வீதம் முற்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

2. 1954-ம் ஆண்டுப் பரீட்சைக்குரிய விண்ணப்ப மாதிரிப் பத்திரங்கள் தேவையானோர் 1-5-54க்கும், 31-5-54க்கும் இடையில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கடிதங்கள், பணம் முதலியன காரியதரிசி, ஆ. கி. பா. சங்கம், வித்தியாகந்தோர், யாழ்ப்பாணம்என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Field Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 28-1954

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org